தேனி மாவட்டம் கம்பம் கல்வத்து நாயகம் தைக்காவில் அடங்கப் பெற்றிருக்கும் வலிமார்களான ஞானக் பெருங்கடல் தேவரீர் ஷைய்குனா அம்பா முஹம்மது ஸயீது ஜல்வத் நாயகம் (ரலி) அவர்களின் பேரரும் ஞான மாமேதை தேவரீர் ஷைய்குனா அம்பா நாயகம் (ரலி) அவர்களின் மகனுமான மௌலவி முஹம்மது அப்துல் கபூர் ஸயீதீ கல்வத்தீ அவர்கள் மனமுவந்தளித்த

# மதிப்புரை

இஸ்லாம் என்பது புனிதம், பக்தியின் மறுஉருவம். சாந்தி, சமாதானத்தின் முழுவடிவம். இப்புனித மிகு சாந்தி மார்க்கத்தை குழப்பங்கள் நிறைந்த குறைமதியாளர்களின் இயக்கம் என வெளி உலகுக்கு காட்ட எத்தனித்தது யூத, கிறிஸ்துவ ஏகாதிபத்தியம். இவர்களின் தாக்குதல்கள் எம் பெருமானார் (ஸல்) அவர்கள் பிறந்தது முதல் இன்றுவரை பல்வேறுபட்ட கோணங்களில் கபட நாடகங்களாய் அரங்கேறிக் கொண்டே இருக்கின்றது. இவர்களின் ஒட்டுமொத்த சூழ்ச்சியின் கோரத்தாக்குதல்களை யெல்லாம் வேரோடு சாய்த்து பார்புகழும் பக்திமார்க்கமாய், உலகம் போற்றும் உன்னத கலாச்சாரமாய், மக்கள் போற்றும் மனித நேயத்தின் மறுவடிவமாய் பீடுநடை போட்டு வருகின்றது இஸ்லாம்–இறைமார்க்கம்.

இஸ்லாமின் துரோகிகளாய், முஸ்லிம்களின் விரோதிகளாய், எம் பெருமானாரின் எதிரிகளாய் ஸஹாபாக்களின் சத்ருக்களாய், இதர இஸ்லாமியத் தலைவர்களுக்கு இப்லீஸ்களாய் தங்களைக் காட்டி பெருமையாய் கருதுகின்றது. யூத, கிறிஸ்துவ ஏகாதிபத்தியம். இவர்களின் சதித்திட்டம், கபடவேடம் பத்ரு, உஹது போர் முஸ்தீபுகளின் போது, நபி (ஸல்) அவர்களால் வெளிச்சம் போட்டு காட்டப்பட்டது. முஸ்லிம்களின் வேடம் பூண்டே இஸ்லாத்தில் ஊடுருவியுள்ள கொள்ளைக் கூட்டத்தினரை இஸ்லாம் இனம் கண்டுகொண்டது. எனினும் இவர்களின் சதித்திட்டம் இஸ்லாத்திற்கு எந்த ஒரு பெரிய பாதிப்பையும் தராமல் யூத, கிறிஸ்துவ மார்க்கத்தையே திணரடித்தது, சீரழித்தது சீர்குலைத்தது. எனினும் இறைமுனிவு (லஃனத்) பெற்ற கூட்டங்கள் இறைவனால் நல்லபடிப்பினை பெற சந்தர்ப்பம் தரப்படாது என்ற நியதியின்படி இந்த யூத, கிறிஸ்துவ ஏகாதிபத்தியம் தங்களின் தோல்வியைக் கண்டு இறை அச்சம் கொள்ளாமல் இஸ்லாத்தை வேரோடு அழிக்க மேலும் மேலும் சதி ஆலோசனையில் ஈடுபட்டது.

இதன் விளைவாக கலீபா உதுமான் (ரலி) அவர்களின் ஆட்சிகாலத்தில் அப்துல்லாஹிப்னு ஸபா என்ற யூதனை முஸ்லிம் வேடத்தில் களம் இறக்கியது. இவன் யூதர்களுக்கே உள்ள சூழ்ச்சியில்

அணிந்தாய்வுரை

அருமைக்குரிய அன்பர், பன்னூலாசிரியர் மௌலவி P.A. பீர்முகம்மது பாகவி அவர்களின் புதிய நூலாகிய "சிலுவைப்போர் சிந்தனைகள்" நூலின் படியை (கைப்பிரதி)ப் படித்தேன். பன்னூலாசிரியர் இச்சிறப்பைத்தந்தது, பன்னூல்கள் படிப்பவர். மார்க்கத்திற்கும், மண்பதைக்கும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில், வழியில் பங்களிப்பைத் தருகின்றனர். மௌலவி பீர்பாகவி அவர்கள் தமது பங்கினை இப்படி இஸ்லாமியக் கருத்துக்களை நவீன கால நிகழ்வுகளுடன் தந்திருக்கிறார். அவரது முந்தைய படைப்புக்களைப் படித்தவர்கள் எமது கருத்துக்கு ஒப்பமளிப்பார்கள். தாம் எடுத்துக் கொண்ட தலைப்புக்கு மாறின்றி "சிலுவைப்போர் சிந்தனைகள்" எழுதப்பட்டிருக்கிறது.

மிகச் சிறிய நூலாக அமைந்த போதிலும் நானூறு, ஐநூறு பக்கங்களிலும் கூறமுடியாத அந்தப் போர்களின் நிகழ்வுகள், அதன் தொடர் விளைவுகளை அதன் அடித்தளம் மாறாமல் தந்திருப்பது இந்நூலின் சிறப்பு. முஸ்லிம்களுக்கும், இஸ்லாமியத்திற்கும் எதிராக நடந்துவரும் மேலை நாட்டுச் சதிகள், ஏறத்தாழ இருநூறு ஆண்டுகள் எட்டுமுறை பெரிய அளவில் நடந்த (ஜெருசலம், மீட்பு, என்ற பெயரில் நடந்த) சிலுவைப் போர்களில் தொடர்ச்சியேயாகும். சமீபத்தில் நமது உயிரினும் மேலான உத்தமநபி ஸல்லல்லாஹு வஸல்லம் அவர்களைப் பற்றி மேலைநாட்டுப் பத்திரிகை வெளியிட்டக் கேலிச் சித்திரக் கேவலங்கள் உட்பட, பழைய பழியுணர்வாளர்களின் மனதில் கனன்று கொண்டிருக்கும் வெறிகொண்ட வெறுப்பின் உச்சத்தின் தொடர்ச்சிதான்.

சமீபத்தில் "SOVERIGN SOCIETY" 'சவரின் சொசைட்டி' என்ற இணைய தளத்தில் கேலிச் சித்திரக் கேவலத்தை நியாயப் படுத்தி வந்தக் கட்டுரையில் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் கூறியதாக வந்தக் கருத்து என்னைக் கொந்தளிக்கச் செய்தது. அதன் மையக் கருத்தையும் எனது பதில் கடிதத்தையும் ஆசிரியர் பீர்பாகவி அவர்கள் இந்த புத்தகத்தின் இறுதியில் பிற் சேர்க்கையாக இணைத்துள்ளார். படிக்கவும், தமிழறியாத நண்பர்கள் படிக்க கொடுக்கவும், சித்திரச்சிதறல்களைப் பற்றி சிந்திக்கவும் அதன் சுருக்கமான மையச் செய்தி பின் வருமாறு;

பத்திரிகைச் சுதந்திரத்திற்கும், தனிமனிதச் சுதந்திரத்திற்கும் கருத்துக்களுக்கும் ஜனநாயக யுகத்தில் தடைப் போட முடியாது. அவ்வாறு செய்வது ஜனநாயக அம்சமல்ல, என்று கூறிவிட்டு அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் கூறுகிறார், "என்னைக் கூட ஒரு பத்திரிக்கை கேலிச் சித்திரம் வரைந்து வந்தது. அதனை நகைச்



சுவையுணர்வோடு ஏற்றுக் கொண்டு சட்டமிட்டு எனது அலுவலக அறை சுவற்றில் மாட்டி வைத்திருக்கிறேன்". அதே சமயம் பலநூற்றாண்டுகளாக நடந்துவரும் நிகழ்வுகளின் (முஸ்லிம்கள் புண்படும் விதமாக) தொடர்ச்சியே இது என்பதையும் கட்டுரையாளர் மறைமுகமாக ஒத்துக் கொள்கிறார். இதைப்படித்தவுடன் என்னுள் நிகழ்ந்த கோப வேதனையைக் கண்டனக் கடிதமாக எழுதியிருந்தேன்.

அதன் மையக் கரு பத்திரிக்கைச் சுதந்திரம் தனி மனிதச் சுதந்திரமெல்லாம் அடுத்த மனிதனைத் தாக்குதலுக்குட்படுத்தாத வரைதான். மீறும்போது அதன் விளைவு மரணாபத்தாக முடியும். ஒன்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும், முஸ்லிம்கள் தங்களின் உயிரினும் மேலாகக் கருதப்படும் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் கௌரவத்திற்கு சிதைவு ஏற்படுத்தும் செய்கையைத் தடுத்துவிட தன்னுயிரையும் தருவார்கள். எங்கள் இறைமொழியும், நபிவழியும், நபி பெருமானில் உருவத்தை ஓவியமாகவோ, சிலையாகவோ உருவாக்க அனுமதித் தரப்படவில்லை. இதுபோன்ற ஒரு இழிச் செயலை பத்திரிக்கை சுதந்திரம், தனிமனிதக் கருத்துச் சுதந்திரம் என்ற பெயரில் ஈசா(அலை) அவரது அன்னை இருவரையும் பற்றி (CHRIST & MPTHER MARY) இப்படியொருக் காரியம் செய்தால் சுய மரியாதையுள்ள எந்தக்கிருத்துவ சகோதர, சகோதரியாவது ஏற்பார்களா? என்று வினவியிருந்தேன்.

இதற்கெல்லாம் மூலகாரணம் நாம்தான். ஒற்றுமை என்னும் கயிற்றைப் பற்றிப் பிடியுங்கள் என்று கூறிய இறை மொழியை ஏற்காமல் சிதறிக் கிடக்கும் இஸ்லாமிய சமுதாயம்தான். இந்நூலாசிரியர் மௌலவி பீர் பாகவி அவர்களின் இது போன்ற பல நூல்கள் தொடர்ந்து வெளிவர, சமுதாயத் தெளிவுக்கு துணை நிற்க அருளிறைவன் அல்லாஹ் (ஜல்)பரக்கத் செய்வானாக என்று இறைவேண்டல் செய்கிறேன். வஸ்ஸலாம்.

அன்புள்ளத்துடன்
மனித நேய விரும்பி,
அடியக்கமங்களம்
கமருல் சமான் பின் நகுதா
05.04.2006

ஜமான் அசோஸியேட்ஸ்
அஞ்சல் பெட்டி எண் 123
சென்னை – 600 001

பிஸ்மில்லா –ஹிர்–ரஹ்மா–னிர்–ரஹீம்

# என்னுரை

“ஒரு மனிதன் (இருட்டில்) நெருப்பை மூட்டினான் (அத்தி) அவனைச் சுற்றியுள்ள பொருட்களை வெளிச்சப்படுத்தியது பூச்சிகளும், விட்டில்களும் அந்த நெருப்பில் விழ ஆரம்பித்தன (அப்போது) அந்த மனிதன் அவற்றைத் தடுக்கின்றான். ஆனால் அதையும் மீறி அப்பூச்சிகள் நெருப்பில் வீழ்(ந்து–மடி)கின்றன. இதுதான் எனக்கும் உங்களுக்கும் உதாரணம். நெருப்பை விட்டும் விலகுங்கள் என்று உங்களின் இடுப்பைப் பிடித்துத் தடுக்கின்றேன் ஆனால் என்னையும் மீறி நீங்கள் அதில் வீழ்கின்றீர்கள்” (நூல் : முஸ்லிம்)

என்று நபிகள் நாயகம் (ஸல்) இஸ்லாத்தை ஏற்காதவர்களைப் பற்றிக் கவலையுடன் தெரிவிக்கின்றார்கள். இறைவனும் திருக்குர்ஆனில் “(நபியே) இவர்கள் நம்பிக்கை கொள்ளவில்லை என்பதற்காக உம்மை நீரே மாய்த்துக் கொள்வீர் போல் தெரிகிறதே!” (26:3) என்று குர்ஆனில் ஆச்சர்ய வார்த்தைகளால் கேட்கின்றான்.

இத்தகைய குணாதிசியங்களைக் கொண்ட கோமான் நபியவர்கள் ஒரு மார்க்க ஆசிரியராக, ஒழுக்கப் போதகராக சமூகச் சீர்திருத்தவாதியாக, அரசியல் மேதாவியாக, இராணுவத்தலைவராக, நிர்வாக அதிபராக, நட்புக்கினிய நண்பராக, உண்மைமிக்க உறவினராக, அன்பு மிக்க கணவராக, பொறுப்புள்ள தந்தையாக மனித வாழ்வின் உன்னதக் கட்டங்கள் அனைத்திலும் ஊடுருவி இருந்தார்கள். மனித வரலாறு அம்மாமனிதருக்கு இணையாக வேறு எந்த மனிதரையும் அறிந்ததில்லை.

மனிதனின் அஞ்ஞான வாழ்க்கையைத் தலைகீழாகப் புரட்டிபோடும் தூய்மையான புரட்சியை ஏற்படுத்திய பூமான் நபியை, கடந்த 1200 ஆண்டுகளாக யூதர்களும், கிறிஸ்தவர்களும் திரித்துக் கூறியும், எழுதியும் வந்துள்ளார்கள். வரலாறு நெடுகிலும் சேற்றை வாரி இறைத்துக் கொண்டே வந்துள்ளார்கள். மதப் போராட்டங்களாக நடந்து வந்துள்ள இப்போராட்டங்கள் இரண்டாம் உலகம் போருக்குப்பின் கலாச்சாரப் பண்பாட்டுப் போராட்டங்களாக மாறியது.

இரண்டாம் உலகப் போருக்குப்பின் உலக முழுவதிலும் மேற்கத்திய ஐரோப்பிய, அமெரிக்கப் பண்பாடுகளும், மேற்கத்தியத்தத்துவங்களும் பரவிவிடும். அதன் மூலம் மேற்கத்தியப் பொருளாதாரம் உயர்வடையும் எனக் கணக்குப்போட்டு தங்களுக்குத்தடையாக இருக்கும் என உணர்ந்த சோவியத் வல்லரசைத் துண்டாடினார்கள். சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சிக்குப்; பின் உலகில் ஒரே சித்தாந்தம் ஒரே



பண்பாடுதான் ஆட்சி செலுத்தும் என்ற அவர்களின் கனவு நனவாவதற்கு முட்டுக்கட்டையாக இஸ்லாமும் இஸ்லாமியப் பண்பாடுகளும் இருப்பதை உணர்ந்தார்கள்.

எனவே இஸ்லாத்தையும், இஸ்லாமியக்கலாசாரத்தையும் அழிக்க எழுத்து மூலமாக முனைப்புக்காட்ட ஆரம்பித்தார்கள்.

இவ்வாறு பூச்சாண்டி காட்டுகின்ற வேலையை ஆரம்பத்தில் தாந்தே–மில்டன் போன்ற கவிஞர்களும், கிப்பன்–வால்ட்டேயர் போன்ற வரலாற்று ஆசிரியர்களும் கான்ட் போன்ற தத்துவவாதிகளும். இவர்களில் தாமஸ் கார்லைல் என்பவரும் விதி விலக்கல்ல, இவர்கள் இஸ்லாத்தைப் பற்றியும் இறைத்தூதரரைப்பற்றியும் இழிவாக, தவறாக திரித்து எழுதியதைப் போன்று, இன்று சியோனிஸ்ட்களும், பர்னால்ட்லெவிஸ்–சாமுவேல் ஹண்டிங்டன்–ஹென்றிகிஸ்ஸிங்கள்–ஃபிரென்ஸிஸ் ஃபுயுகோமா–டேனியல் பைப்ஸ் போன்ற அமெரிக்க சிந்தனையாளர்களும் ஒன்று சேர்ந்துள்ளனர்.

கோடிக்கணக்கான டாலர்களை ஒதுக்கி ஜார்ஜ்புஷ் அமைத்திருக்கும் திங்டாங் என்கின்ற அறிவு ஜீவிகளின் முக்கிய நபரான டேனியல் பைப்ஸ் விஷத்தன்மை கொண்ட யூதரான இவர்ஸியோனிஸ இயக்கத்தில் உயர் பதவிவகிக்கின்றார். கடந்த நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக ஏராளமான நூல்களையும், நூற்றுக்கணக்கான கட்டுரைகளையும் எழுதி வந்துள்ளான். சாத்தானிய கார்ட்டூன்களை வெளியிடத் தூண்டியவனே இவன்தான்.

செப்டம்பர் 11 நிகழ்வுக்குப் பிறகு இவர்கள் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் பயங்கரவாதிகளாகச் சித்தரித்து விட்டார்கள். மேற்குறிப்பிட்டவர்களில் அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ்ஷுக்கு மிகவும் நெருக்கமானவரான டேனியல் பைப்ஸ் எனும்யூதர் டென்மார்க்கில் யூதர்களால் நடத்தப்படும் ஜீலியன் போஸ்ட்டன் என்ற நாளிதழின் கலைத்துறை ஆசிரியரான பிளமிங் ரோஸ் என்பவரை சென்ற ஆண்டு அமெரிக்காவிற்கு தமது விருந்தாளியாக வரவழைத்து அவரை குஷி படுத்தி கார்ட்டூன்கள் வெளியிட ஊக்கப்படுத்தி அனுப்பிவைத்தார். பிளமிங் ரோஸ் அமெரிக்கா சென்று வந்ததன் பின்பே சாத்தானிய கார்ட்டூன்கள் வெளியிடப்பட்டன. கார்ட்டூன்களை வரைந்தவன் குர்ட்டுவெங்ட்டர்கார்ட் என்பவனாவான்.

முதலில் 12 கேலிச் சித்திரங்களை இணையதளத்திலும் அதன் பின் செப்டம்பர் 30 (2005) ல் ஜுலியன் போஸ்ட்டிலும் பின் மீண்டும் ஜனவரி 2006 ல் இருபத்து இரண்டு மேற்கத்திய நாடுகளிலுள்ள 175 நாளிதழ்களில் சாத்தானிய கார்ட்டூன்களை வெளியிட்டு, உலகிலுள்ள அறிஞர்கள் அனைவரும் வியந்து போற்றும் உத்தம நபி (ஸல்)

அவர்களை இழிவுபடுத்தி உலகிலுள்ள 130 கோடி முஸ்லிம்களின் உள்ளங்களையும் புண்படவைத்தார்கள்.

இந்நிகழ்ச்சிக்குப்பின் டென்மார்க்தலைநகரான கோபன் ஹேகனின் மத போதகர் கிறிஸ்டீன் என்பவர் பெருமானாரவர்களின் வரலாற்றைப் படித்து நபிகளாரின் குணாதிசயங்களால் ஈர்க்கப்பட்டு கோபன் ஹே களிலுள்ள ராபிதத்துல் ஆலமில் இஸ்லாமி அலுவலகம் சென்று இஸ்லாத்தில் இணைந்தார்.

ஐரோப்பிய–அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கபட நாடகங்களை நாம் அனைவரும் புரிந்து கொள்வதோடு வரலாற்று நாயகர் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் தூய வரலாற்றை நமது மற்ற மத நண்பர்களுக்கும் கொடுத்துப் படிக்கச் செய்வதன் மூலம் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் மேன்மையை உலகம் உணர்ந்திடச் செய்ய அல்லாஹ் பேருதவி புரிவானாக! இந்நூலுக்கு மதிப்புரை வழங்கிய கம்பம் அம்பா நாயகம் அவர்களின் திருமகனார் மௌலவி முஹம்மது அப்துல் கபூர் ஸயீதி கல்வத்தீ அவர்களுக்கும், ஷைகுனா அம்பா நாயகம் அவர்களின் இளையமகனார் கலீபா முஹம்மது அப்துல் காதிர் ஸயீதீ கல்வத்தீ அவர்களுக்கும். அணிந்தாய்வுரை வழங்கிய சென்னை ஜமான் அசோஷியேட் உரிமையாளர் கமருல் ஜமான் அவர்களுக்கும். இந்நூலை அழகுற அமைத்துக் கொடுத்த முஸ்லிம் குரல் பிரிண்டர்ஸ் உரிமையாளர் அல்ஹாஜ் S.M. கனி சிஷ்தி அண்ணன் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வஸ்ஸலாம்.

*Moulavi*
*P.A. Peer Mohamed Baqavi*
*27, Palli Vasal West Street,*
*Keela Vadagarai,*
*Periyakulam - 626501.*



## அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அழகுத் தோற்றம்

பெருமானாரவர்கள் கண்ணிய மிக்கவர்களாகவும் பிறரால் பெருமை படுத்தப்பட்டவர்களாகவுமிருந்தார்கள். அவர்களின் திருவதனம் பவுர்ணமி இரவின் பூரணச் சந்திரனைப் போல் இலங்கிக் கொண்டிருக்கும். நடுத்தரமான உயரமுடைய மனிதரைவிடச் சற்று உயரமாகத் தோற்றமளித்தனர், எனினும் உயரமான மனிதர்களை விடச் சிறிது குறைவான உயரமுடையவர்களவே இருந்தனர். அவர்களின் தலை நடுத்தரமான பருமனுடையதாக இருந்தது. தலைமுடி சற்று நெழிவுடையதாக இருந்தது. தலையில் தற்செயலாக மாங்குப்படிந்து விடுமாயின் அதை அப்படியே விட்டுவிடுவர் அதை பிரமாதப் படுத்திக் கொள்வதில்லை. தலை முடியை வளர விட்டிருந்தால் அது காதின் சோனையைக் கடந்துவளர்வதுமுண்டு. மேனி ஒளி வீசிக் கொண்டிருக்கும். படர்ந்த நெற்றி அடர்ந்த மெல்லிய வளைவான புருவம் இரண்டு புருவ மத்தியில் ஒரு நரம்பு இருக்கும். கோபத்தின் போது அது விம்மிக் கொள்ளும். அப்போது அன்னாரின் மூக்கு நீண்டு விட்டது போலிருக்கும். புதிதாகக் காண்போர் அதை நீண்ட மூக்கென நினைத்துக் கொள்வர். கவனித்துப் பார்த்த போது அதிலுள்ள ஒளியின் காரணத்தால் மூக்கு நீண்டு தெரிகின்றது என்பது புலனாகும்.

தாடி நெருங்கி அடர்ந்திருக்கும். கருவிழி நன்றாகக் கருத்திருக்கும். வதனம் தசைப்பிடிப்பால் தொங்கிக் கொண்டிராமல் சமமாக இருக்கும். பற்கள் சற்று இடை வெளிவிட்டுச் சிறிதாக ஒளிர்ந்து கொண்டிருக்கும். நெஞ்சிலிருந்து தொப்பூழ்வரை மெல்லிய உரோமக்கொடி ஓடியிருக்கும் பிடரி கடைந்தெடுத்தது போன்று அழகாய் வெள்ளி போன்ற நிறத்தோடு இலங்கிக் கொண்டிருக்கும். அவையங்கள் அனைத்தும் தசைப்பிடிப்பாக நடுத்தரமான அமைப்புடையதாக இருக்கும். திருமேனி சற்று பருத்திப்பதுடன் வயிறும் – நெஞ்சும் சமமாக இருக்கும். இரண்டு புயங்களுக்கு மத்தியில் ஓரளவு அகலமிருக்கும். எழும்புப் பூட்டுகளும், மொழிகளும் பருத்திருக்கும். அங்கத்திலிருக்கும் ஆடையஅகற்றும் போது மேனி இலங்கிக்கொண்டிருக்கும்.

நெஞ்சுக்கும் தொப்புள்க்கும் இடையே ஓடிக் கொண்டிருக்கும் உரோமக் கொடியைத்தவிர தோள்புயம்– நெஞ்சின் மேல்பாகம் வயிறு ஆகியவைகளில் உரோமங்கள் இருக்கும். கரண்டைக் கை நீண்டிருக்கும், உள்ளங்கை விரிந்திருக்கும். உள்ளங்கைகள் பொருத்தமான நீளமுடையதாக இருக்கும். பாதக்கால் சற்றும் குழிந்திருக்கும். இரு மேல் பாதங்களும் ஒரே அளவாக ஒப்புரவாக இருக்கும். அதனால் அவைகளில் தண்ணீர் பட்டால் தண்ணீர் தங்காது. பெருமானார் (ஸல்) நடக்கும் போது முன்புறமாகச் சிறிது

கவிழ்ந்து பாதத்தைப் பூமியிலிருந்து பிடுங்கி எடுத்தாற் போல் அழுத்தமாக அடியெடுத்து நிலத்தில் மெதுமாக வைத்து நடப்பார். வேகமாகவும் பாதங்களை விசாலமாக வீசிவைத்தும் நடப்பது வழக்கம். நடக்கும் போது பள்ளத்தாக்கில் இறங்க அடியெடுத்து வைப்பது போல் தோற்ற மளிப்பார்கள். சென்று கொண்டிருக்கும் போது ஒருவரைத்திரும்பிப் பார்ப்பதாயின் மேனி முழுவதையும் திருப்பியே அவரைப்பார்ப்பார்கள்.

பார்வை எப்பொழுதும் கீழ்நோக்கியே இருக்கும். கண்பார்வை விண்ணை நோக்குவதை விட அதிகமாகப் பூமியை நோக்கிக் கொண்டிருக்கும். பெரும்பாலும் கடைக்கண் கொண்டே ஒன்றை நோக்குவார்கள். தோழர்கள் முன்செல்லப் பெருமானாரவர்கள் பின்னே செல்வார்கள். யாரைச்சந்திக்க நேர்ந்தாலும் ஸலாம் கூறுவதில் முந்திக் கொள்வார்கள்.

"பெருமனார் (ஸல்) நடுத்தர உயரமுடையவர்களாகவும், உரோமங்கள் ஓரளவு சுருண்டவைகளாகவும் அவர்களின் மேனி சிவப்பு கலந்த வெண்ணிறமெனும் பொன்னிறமாக இருந்தது. அன்னாரின் இருபுயங்களுக்கு மத்தியில் இறுதி முத்திரையென்னும் "இலாஞ்சனை" இருந்தது. அவர்கள் பெரிய வள்ளல் மனம் படைத்தவர்களாகவும் பேச்சில் வாய்மை உடையவர்களாகவும், நளின சுபாவமுடையவர்களாகவும், உயர்குடுத்தினராகவும் இருந்தார்கள். பெருமனார்(ஸல்) அவர்களை திடீரென ஒருவர்கண்டால் அச்சம் கொள்வர். அவர்களிடம் பழகுபவர்கள் அவர்களை நேசிக்க ஆரம்பித்து விடுவர். அப்பெருமகனார் போன்ற அழகுடைய ஒருவரை அவர்களுக்கு முன்பும் அவர்களுக்கு பின்னேயும் நான் காணவில்லை".

இவ்விருவர்ணணைகளையும் இமாம் ஹஸன் (ரலி) தங்களின் மாமா ஹிந்து இப்னு அபு ஹாலா கூறியதாகவும், ஹஜ்ரத் அலி (ரலி) வர்ணித்ததாக அவர்களின் பேரர் இப்றாஹீம் அவர்களும் அறிவிக்க ஷமாயில் திர்மதீயில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## பெருமானாரின் அற்புத உடலமைப்பு

முன்புறமாகப் பார்க்கும் அதேவேளை உடலைத்திருப்பாமல் பின் புறமும் பார்க்கும் ஆற்றலைப் பெருமானார் (ஸல்) பெற்றிருந்தார்கள். சூரிய வெளிச்சத்தால் ஒரு பொருளைப்பார்ப்பது போன்ற ஒளியின் தன்மையுடன் அவர்கள் இரவிலும் பார்ப்பார்கள். வெறும் வயிற்றோடு உறங்கிய பெருமானார் வயிறு நிரம்பியவர்களாக எழுந்திருப்பார்கள். உறங்கும் போது அவர்களின் கண்தூங்கும், உள்ளம் தூங்காது விழித்தே இருக்கும். அவர்களின் உடம்பில் ஈ–கொசுக்கள் உட்கார்ந்தது கிடையாது. அவர்கள் விருத்த சேதனம் (கத்னா)



செய்யப்பட்டவர்களாவே பிறந்தார்கள். உறக்கத்தில் ஸ்கலிதம் ஏற்பட்டது கிடையாது. பெருமானாரின் குரலொலி மற்றவர்களைவிட அதிகதூரம் செல்லும். அவர்களின் வியர்வை கஸ்தூரி மணம்கமழும். ஒரு கூட்டத்தில் பெருமானார் (ஸல்) அமர்ந்திருந்தாலும், நின்றிருந்தாலும் பெருமானாரின் தோள்புயமே உயரமாகவும் எடுப்பாகவும் தெரியும். ஒரு மாத தொலைதூரத்திற்கு அப்பால் பெருமானார் (ஸல்) இருந்தால் இங்குள்ளவர்களுக்கு பெருமானாரின் பயம் இருந்து கொண்டே இருக்கும். பெருமானாரின் பேச்சு சொல் சுருக்கமாகவும் கருத்துச் செறிவுமிக்கதாகவும் இருக்கும். பெருமானார் (ஸல்) அவர்களின் சொற்பொழிவு கேட்போர்மனத்தை ஈர்த்துக்கவர்ந்து பக்குவப்படுத்தி பரவசத்தில் மூழ்கச் செய்துவிடும். சொற்பொழிவின் போது அந்த உத்தம திருவுருவ உள்ளத்தின் உணர்வலைகளின் வெளித் தோற்றம் பேச்சின் தொனியிலே, திருவதனத்திலே படம்பிடித்தாற் போன்று நடமாடிக் கொண்டிருக்கும். பள்ளிவாசலில் சொற்பொழிவாற்றினால் கம்பை ஊன்றி நிற்பார்கள். போர்க்களத்தில் சொற்பொழிவு ஆற்றும்போது கரங்களில் வில்லைப் பிடித்து நிற்பார்கள்.

## உலகின் முதல் மாமனிதர்

இந்த உலகில் வாழ்ந்த கோடானகோடி மக்களில் பத்துலட்சத்தில் ஒருவர்தான் காலத்தை வென்ற பெருவாழ்வு வாழ்ந்து வாழ்க்கை அகராதியில் இடம் பெறுகின்றனர். இவ்வாறு வாழ்ந்த இருபதாயிரம் பேர்களின் வரலாற்றில் நூறு பேர்களை மட்டும் தேர்ந்தெடுத்த "மைக்கேல் ஹெச் ஹார்ட்" அவர்கள் அந்த நூறு நபர்களில் முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு முதலிடத்தை அளித்துள்ளார்கள். இவ்வாறு அவர்கள் தேர்ந்தெடுத்து நூல்வெளியிட்டதால் மேற்கத்திய நாடுகளில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது. பலர் ஆட்சேபனைக் குரல் எழுப்பினார்கள். அவர்களில் முக்கியமானவர்களை ஒன்று கூட்டிய மைக்கேல் ஹெச் ஹார்ட், ஆட்சேபனை செய்தவர்களிடம் உலகில் துறவியாகவும் அதேசமயம் குடும்பஸ்தராகவும் வாழ்ந்தவர்யார்? உலகில் பெரும் செல்வந்தராகவும் அதேசமயம் பரம ஏழையாகவும் வாழ்ந்தவர்யார்? உலகில் கற்காதவராகவும் அதேசமயம் அறிவின் கடலாகவும் வாழ்ந்தவர் யார்? உலகில் அநாதையாகப் பிறந்து தமது 23 ஆண்டு காலப் பிரச்சாரத்தால் ஒரு லட்சத்து இருபத்து நான்காயிரம் மக்கள் தம்மைப் பின்பற்றுபவர்களாக அனைவரையும் ஒரு சேரக் கண்டுகளித்து வெற்றிவாகை சூடியவர்யார்? சமயம்–உலகியல் ஆகிய இரு நிலைகளிலும் ஒருசேர மகத்தான வெற்றி பெற்றவ வரலாற்றில் முஹம்மது நபி ஒருவர்தான் என்று பதிலுரைத்தார்கள்.

## மைக் ரோ சாஃப்ட் நிறுவனம்

உலகின் மூன்று முதல் பணக்காரர்களில் முதலாவது பணக்காரரான

அமெரிக்காவைச் சேர்ந்த "பில்கேட்ஸ்" அவர்களுக்குச் சொந்தமான மைக்ரோ சாஃப்ட் நிறுவனம் கி.பி. 2000 ம் ஆண்டில் கருத்துக்கணிப்பு இண்டர் நெட் மூலம் நடத்தியது. "உலக சரித்திரத்தில் மார்க்கம் – மதம்– தத்துவம், இவற்றில் முதன்மை பெற்றவர் யார்?" ஆன்லைன் மூலம் வாக்களித்தவர்களின் 75 சதவீதத்தினர் நபி முஹம்மது நபி (ஸல்) அவர்களே முதன்மையானவர்கள் என்றும் ஈஸாநபியவர்களுக்கு 16 சதவீதத்தினரும், அன்னை தெரஸா அவர்களுக்கு மூன்று சதவீதத்தவர்களும், ஜோஸப் ஸ்மித் திற்கு 2 சதவீதமும்– மூஸா நபி புத்தர் ஆகியவர்களுக்கு 1 சதவீதமும் வாக்களித்துள்ளனர்.

## பெருமானாரின் அகஅழகு எனும் இயல்பு!

ஒரு முறை ஹஜ்ரத் அலி (ரலி) பெருமானார் (ஸல்) அவர்களிடம் தங்களின் இயல்பு என்ன? என்றார்கள். அப்போது பெருமானார் (ஸல்) "மெஞ்ஞான அறிவு எனது மூலதனம்– பகுத்தறிவு எனது சன்மார்க்க அடிப்படை – அன்பு எனது அடித்தளம் – ஆர்வம் எனது வாகனம் – இறைநினைவு எனது தோழன் – நம்பிக்கை எனது சேமிப்புப் பொருள் – கவலை எனது துணைவன் – கல்வி எனது ஆயுதம் – பொறுமை எனது மேலாடை – கிடைத்ததைப் பொருந்திக் கொள்வது எனது லாபகரப் பொருள் – தாழ்மை எனது பெருமை – (உலகப்) பற்றற்ற தன்மை எனது தொழில் – உறுதி எனது ஊக்கம் – உண்மை எனது உதவி – வழிபாடு எனது கட்டுப்பாடு – (ஜிஹாத்) தியாகம் எனது குணம்– எனது கண்கள் குளிர்ச்சியடைவது தொழுகையிலே" எனப்பதிலுரைத்தார்கள்.

இவ்வியல்புக் கேற்ப பெருமானார் (ஸல்) அவர்கள் தங்களைப் பின்பற்றிய இஸ்லாமியர் அனைவரையும் வார்த்தெடுத்தார்கள். அதன் பயனாக முஸ்லிம்கள் அனைவரும் உள்ளும், புறமும் ஒன்றாக இருந்ததுடன் அவர்களின் வார்த்தை உள்ளத்தின் வெளிப்பாடாகவே இருந்தது. தாம்விரும்புவதை பிறருக்கும் விரும்பினார்கள். பிறர் வளர்ச்சியில் பெருமிதம் கொண்டார்கள். மூத்தோருக்குமரியாதை அளித்ததுடன் சிறியோர்பால்பேரன்புடையவர்களாக இருந்தார்கள்.

வியர்வை உளர்வதற்குமுன் தொழிலாளியின் கூலியைக் கொடுத்ததோடு அன்பளிப்பும் வழங்கினார்கள். பிறர் உரிமைகளை அபகரிக்காமல் தமதுரிமையையும் பாதுகாத்துக் கொண்டார்கள். ஆண். பெண் இருபாலாருக்குமிடையே பேதம் விளைவிக்காதோடு, சொந்த விருப்பு வெறுப்புக்களுக்கு இடமளிக்காமல் நியாயத்திற்கே முதலிடமளித்தார்கள். அவரவர் மதக்கலாச்சாரங்களில் குறுக்கிடாமல் அவரவர்பாதை அவரவர்க்குப் பெரிது என்ற பெருநோக்குடன் எல்லா மதம் மொழி வழிகளையும் சரிநிகர் சமானமாகக் கருதி, அவரவர்களின் கொள்கை கோட்பாடுகளுக்கு முழுச்சுதந்திர மளித்தார்கள்.



சமுதாயத்தில் நினைத்ததை நினைத்தவுடன் செய்து முடிக்கும் வன்முறையாளர்களின் அக்கிரமத்தை வேரோடுகளைந்தெரிந்தார்கள். இவ்வரிய செயல்களை இஸ்லாமிய ஏழை முதற்கொண்டு அரசு அதிகாரிகள், பிரதமர், ஜனாதிபதிவரை கடைபிடித்தார்கள். இவ்வரிய செயல்களின் காரணமாக உலகின் பெரும் பகுதி மக்கள் இஸ்லாத்தால் ஈர்க்கப்பட்டார்கள். ஆசியா ஆப்ரிக்காவின் பெரும் பகுதியும், ஐரோப்பாவின் சிறிது பகுதிகளும் இஸ்லாமிய ஆளுகையின் கீழ் இருந்தது.

கி.பி. 711 ம் ஆண்டில் ஸ்பெயின் காதில்கிவர் ஆற்றங்கரையில் அமைந்துள்ள "கார்டோவா" எனும் நகரைத்தை தலைநகராகக் கொண்டு இஸ்லாமிய ஆட்சி துவங்கி 1492 ல் முடிவுற்ற எண்ணூறு ஆண்டுகால ஆட்சியை வரலாற்றாசிரியர்கள் பின்வருமாறு விபரிக்கின்றார்கள்.

ஐரோப்பாவின் பெரும்பாகம் வறுமையிலும் அறியாமையிலும் சூழ்ந்திருந்த அந்தக் காலத்தில் ஸ்பெயின் முஸ்லிம்கள் தலைசிறந்த நாகரீகத்தையும் ஒழுங்கு முறை அமைந்த செல்வ வாழ்க்கையையும் அமைத்தார்கள். கலை விஞ்ஞானம் தத்துவம் செய்யுள் ஆகியவற்றில் முஸ்லிம் ஸ்பெயின் பெரும் பங்குவகித்தது என்று J.P. திரெண்ட் இஸ்லாம் விட்டுச் சென்ற உடமை எனும் நூலில் குறிப்பிடுகின்றார்.

கி.பி. பத்தாம் நூற்றாண்டில் ஒருவர் ஸ்பெயினுள் நுழைந்தால் விவசாயம் – வியாபாரம் கைத் தொழில்களில் அக்கரை கொண்ட முற்போக்கு அரசாங்கத்தின் முன்னேற்றம் செல்வப் பெருக்குகளின் அடையாளங்களைக் காண்பார். அரேபியப் பொறி இயல்வல்லுனர்களால் நீர்ப்பாசன வசதி செய்யப்பட்ட நிலங்களில் விவசாயிகள் உழுது கொண்டிருப்பதையும். கண்ணாடி–தந்தம்–தோல்களினால் கலைப் பொருட்கள் செய்து கொண்டிருக்கும் தொழிலாளர்களையும், தோலுக்குப் பதிலாக காகிதத்தில் எழுதும் எழுத்தாளர்களையும், தலைநகர் கார்டோவாவில் 900 குளியல் அறைகளையும் நானூறு பள்ளிவாசல்களையும், கலைநயத்துடன் நிர்மாணித்த கீழைநாட்டு முஸ்லிம்களின் திறமையைக் கண்டு வியப்புறுவார் என்று H.L.A. ஃபிஷர் தமது ஐரோப்பிய வரலாறு எனும் நூலில் குறிப்பிடுகின்றார்.

கார்டோவா நகரில் ஒரு லட்சத்துப் பதிமுன்றாயிரம் வீடுகளும், இருபத் தொன்று நகர்புர ஊர்களும், எழுபது நூலகங்களும், எண்ணற்ற புத்தகக் கடைகளும் இருந்தன. பலமைல்கள் நீளமுள்ள தெருக்களும் அத்தெருக்களின் இருபுறவீட்டிலிருந்தும் விளக்குகள் ஒளிச்சிந்திக் கொண்டிருந்தது ஆனால் இதற்குப்பின்னால் எழுநூறு ஆண்டுகள் வரையிலும் கூட லண்டன் தெருக்களில் ஒரு பொது விளக்குகள் கூடக்கிடையாது. நீராடுவது அஞ்ஞானிகளான முஸ்லிம்களின் வழக்கம் என்று ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் கருதிய அந்தக்

காலத்தில் கார்டோவா நகரில் முஸ்லிம் விஞ்ஞானிகள் தலைமுறை தலைமுறையாக வசதி நிறைந்த இல்லங்களில் வாழ்ந்தார்கள். நவார்–பர்ஸலூனா பிரதேசக் கிறிஸ்தவ மன்னர்களுக்கு மருத்துவரோ, கலைஞரோ தேவைப்பட்டால் கார்டோவா முஸ்லிம் மன்னருக்குத் தான் விண்ணப்பம் செய்வார்கள். பேராசிரியர் ஹிட்டி.

## சிலுவைப்போரும் - போப் இரண்டாம் அர்பனும்!

இஸ்லாம் ஸ்பெயினுக்குள் நுழைவதற்கு முன் விடிசா என்பவர் ரோம ராஜ்யத்தின் பிரதிநிதியாட்சி புரிந்து வந்தார். இவரின் மருமகன் ஜூலியன் பிரபு ஆப்ரிக்காவிலுள்ள கியூட்டாப் பிரதேசத்தின் சிற்றரசராக இருந்தார். விடிசாவுக்குப்பின் ஸ்பெயினை ஆண்ட ரட்ரிக் என்ற மன்னன் ஜூலியன் பிரவுவின் மகள் புளோரின்தாவைக் கற்பழித்து அவமானப் படுத்தி இருந்தான். இதற்குப் பழிவாங்க ஜூலியின் பிரபு ஸ்பெயின் மீது படையெடுக்க இஸ்லாமிய படைத் தளபதி மூஸப்னு நுழைரைத் தூண்டிக் கொண்டிருந்தார். மேலும் ஸ்பெயினில் துன்பக் கடலில் சிக்கித்தவித்த யூதர்களும் ஸ்பெயினை வெல்ல தூது அனுப்பிக் கொண்டே இருந்தார்கள். இந்நிலையில்தான் ஸ்பெயின் இஸ்லாமிய ஆட்சியின் கீழ்வந்தது.

முன்னாள் சோவியத யூனியனின் அங்கமாக இருந்த "தூக மெனிஸ்தான்" பகுதியிலுள்ள கிர்கிஜ் மலையடிவாரத்தில் வாழ்ந்த பழங்குடியினர் புலம் பெயர்ந்து புகாராவந்து இஸ்லாத்தைத் தங்களின் வாழக்கை நெறியாக ஏற்றுக் கொண்டார்கள். இவர்களின் தலைவரான "செல்ஜூக்" என்பவரின் பெயராலேயே செல்ஜூக்கியர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். இவர்கள் ரோமானியர்களின் கீழ் இருந்த ஆசியப்பகுதிகளையெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக வென்று கொண்டே வந்தார்கள்.

இவர்களின் வெற்றியைக் கண்டு வெகுண்ட ரோமப்பேரரசர் "அலக்ஸிஸியஸ் கம்னனஸ்" ஐரோப்பாவிலுள்ள பழைய டேனிஷ் இன்றைய டென்மார்க் நாட்டைச் சேர்ந்த மத குரு பீட்டர் என்பவரிடம் முறையிட அவர் போப் இரண்டாம் அர்பனிடம் வேண்ட கிரேக்க–ரோமானிய மதபீடங்களின் சர்ச்சையைத் தீர்க்க இதுவே தக்க தருணம் என்றுணர்ந்த போப் அர்பன் 1095 நவம்பர் 27 ம் நாள் தென் கிழக்கு பிரான்சிலுள்ள கிளர்மாண்டி எனும் நகரில் கிறிஸ்தவ மகாசபையைக் கூட்டினார். அதில் அவர்தமது உணர்ச்சிகரமான பேச்சில் கிறிஸ்தவர்களுக்கு இஸ்லாமியர்கள் மீது உலக முடிவு நாள்வரை தொடராக வெறுப்புக்குள்ளாகும் விஷ விதையை ஊண்டினார். இவரின் பேச்சால் துடித்தெழுந்த கிறிஸ்தவர்கள் தங்களின் உடைகளில் சிலுவைச் சின்னத்தை அணிந்து கொண்டு 1097 ல் இஸ்தம்பூலில் ஒன்று கூடினார்கள். இவர்களில் பிரெஞ்சுக்காரர்களும், நார்மன்களும்



ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் பேர் இருந்தார்கள். இதன் காரணமாகவே இப்போருக்கு சிலுவைப்போர் எனப் பெயர் வரலாயிற்று. இப்போர்

## இருநூறு வருடங்களில் எட்டுமுறை நிகழ்ந்தது

இப்போரின் இறுதிக் கட்டமாக சுல்த்தான் ஸலாஹூத்தீன் கி.பி. 1189 ல் ஜெருஸலத்தைக் கைப்பற்றியதோடு அங்கு கிறிஸ்தவர்களும்–யூதர்களும் தாராளமாக வந்து தொழலாம் எனப் பிரகடனப்படுத்தினார். இதன் பின் ஐய்யூபி அரசர்களும் – மம்லூக் சுல்த்தான்களும் ஒன்றிணைந்து கி.பி 1291 ல் சிரியாவிலிருந்த சிலுவை வீரர்களை முழுமையாக அப்புறப்படுத்தியதோடு முடிவடைகின்றது. இதன் பின் கி.பி. 1212 ல் இரண்டு சிறுவர்கள் சிலுவைப் போர் துவங்கப்பட்டு 50,000 ஐரோப்பியச் சிறுவர்களை ஏற்றி வந்த கப்பல் முதலாளிகளே அச்சிறுவர்களை அடிமைச் சந்தையில் விற்றுவிட்டார்கள். சிலுவைப் போரினால் இஸ்லாமியர்களுக்கும் – கிறிஸ்தவர்களுக்கும் மனக்கசப்பே உருவாகியது. 1917ல் பிரிட்டிஷ் தளபதி "அல்லன்பீ" ஜெருஸலத்தில் நுழையும் போது அவர் வாயிலிருந்து வந்த முதல் வார்த்தை இப்பொழுது தான் சிலுவைப்போர் முடிந்தது என்ற வார்த்தையாகும். 1920 ல் பிரெஞ்சுத் தளபதி "கொராட்" என்பான் டமாஸ்களில் நுழைந்து "சலாடின் எழுந்திரும்" இதோ சிலுவைப் போர் வீரர்களின், பேரர்களின் பேரர்கள் வந்திருக்கின்றோம் எனக் கூறிஆர்ப்பரித்து தமது வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டான்.

இப்போரின் விளைவாக ஐரோப்பா மறுமலர்ச்சியடைந்தது. அரபியிலிருந்த அனைத்துக் கலைகளும் ஐரோப்பியமொழிக்கு மாற்றம் செய்யப்பட்டது ஆண்டயோக் நகரைச் சேர்ந்த ஸ்டீபன் அரபி மொழிகளிலிருந்து லத்தீன் மொழிக்குப்பல மொழி பெயர்ப்புகளைச் செய்தார். திரிப்போலியைச் சேர்ந்த பிலிப் என்பவரும் அநேக அரபிநூல்களை மொழி பெயர்த்தார். இப்போருக்குப் பின்புதான் ஐரோப்பாவில் மருத்துவ மனைகளும்–குளியல் அறைகளும் கட்டப்பட்டன.

திரிப்போலியைச் சேர்ந்த பிலிப் என்பவர் குரு அரிஸ்ட்டாட்டில் தமது மாணவர் அலக்ஸாண்டருக்கு உபதேசித்த நூல் அரபியில்ஸிர்ருல் அஸ்ரார், எனும் பெயரில் இருந்தது அந்நூலை லத்தீனில் "சீக்ரடம்–சீக்ரடோரம்" என்ற பெயரில் மொழி பெயர்த்தார். கலீலா–வ–திம்னா என்ற நூலும் அல்ஃபுலைலா–வ–லைலா என்ற நூலும் லத்தீனில் மொழி பெயர்க்கப்பட்டதால் சாசரின் கதைகளுக்கும்–பொகாஸியாவின் டிகாமிரானுக்கும் கருவாக அமைந்தது.

வாளினால் முஸ்லிம்களை வெல்ல முடியாது என்றுணர்ந்த ஐரோப்பியர்கள் அரபியைப் படித்ததுடன் பாரிஸ்–லுவைன்–ஸலமன்கா–

ஆகியபல்கலைக்கழகங்களில் அரபியைப் போதிக்கலாயினர். வெடி மருந்துகள் பயன்படுத்துவதையும் புறாக்கள் மூலம் செய்தி அறிவிப்பதையும் இயந்திரத்தின் மூலம் கவண்கற்கள் எரிவதையும் கற்றுக் கொண்டார்கள். ஒரு நாட்டிற்குரிய சின்னங்கள் அமைப்பதை முஸ்லிம் மன்னர்களின் கிரீடங்களைப்பார்த்துக் கற்றுக் கொண்டார்கள். ஐரோப்பாவின் மறு மலர்ச்சிக்கு இஸ்லாமும் முஸ்லிம் விஞ்ஞானிகளும் முன்னோடிகளாக விளங்கினார்கள்.

சிலுவைப் போரின் பின் விளைவான முஸ்லிம் துவேஷ மனப்பான்மையைப் பெற்ற கிறிஸ்தவர்களின் வழியில் வந்த "காஸ்ட்டில்" இளவரசி இஸபெல்லாவும் ஆரகான் நாட்டு இளவரசன் பெர்டினன்டும் கி.பி. 1469–ல் திருமணம் செய்து கொண்டார்கள். இவர்கள் இருவரின் மனப்பான்மையும் இஸ்லாமிய ஆட்சியையும் முஸ்லிம்களையும் ஸ்பெயினில் இல்லாமலாக்க வேண்டும் என்பதாகவே இருந்தது. இதன் விளைவால் கி.பி. 1481 ல் இஸ்லாமிய ஆட்சிக்கு எதிராகப் போரைத் துவக்கிய இஸபெல்லா 1492 ல் வெற்றிவாகைசூடினார். முதலில் அரபு குலத்தவர்கள் நாட்டை விட்டும் வெளியேறினார்கள். செல்லும் வழியில் விஷப்புகையால் பெரும்பாலோர் இறந்தார்கள் மற்ற முஸ்லிம்கள் எல்லாம் கடும் விசாரணை மன்றத்தின் மூலம் கொலைசெய்யப்பட்டார்கள். எஞ்சியோர் கிறிஸ்தவ மதத்தில் வலுக்கட்டாயமாகச் சேர்க்கப்பட்டார்கள் கி.பி. 1612 ஸ்பெயினில் எந்த முஸ்லிம் இல்லமலாக்கப்பட்டார்கள்.

## கொலம் பஸ"ம் அமெரிக்காவும்

"கி.மு. 1500 மத்திய அமெரிக்காவில் செங்கோலோச்சிக் கொண்டிருந்த மாயர்கள் கி.மு. 1000– ல் திடீரென மறைந்து விட்டார்கள். மறைந்ததற்கான காரணம் இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை. இதன் பின் இந்தியர்கள் அங்கு வாழ்ந்ததற்கான தடயங்களும் உள்ளன. அங்கு அவர்கள் வாழ்ந்தற்கான அடையாளங்களாக கோவில்களும் கலைச்சின்னங்களும் ஈக்குவாடர் – கொலம்பியா– போன்ற மாநிலங்களிலும், பெரு–பொலிவியா போன்ற நாடுகளிலும் பரவிக்கிடக்கின்றன. இதன் பின் அஸ்டக்குகளும்–வாழ்ந்து வந்துள்ளனர். "கரஷோத்தா" எனும் தலை நகரில் ஆட்சிபுரிந்து வந்த "தாகுந்த்" என்ற மன்னன் போற்றுதலுக்குரியவனாவான் என்று ஆய்வாளர் "ஜான்ஸ்டீபன்ஸ்" கூறுகின்றார்.

இதன்பின் கொலம்பஸ்–ஸ்பெயின் ராணி இஸபெல்லாவிடம் பயணச் செலவு பெற்று இந்தியாவைக்கண்டு பிடிக்க பயண மேற்கொண்டு 1492 ல் அரிக்காவில் தரை இறங்கினார்.

ஆனால் கொலம்பஸுக்கு முன்னரே கி.பி. 1275–85 களில் ஆட்சிபுரிந்து



வந்து ஆப்ரிக்காவின் மாலி சுல்த்தான் அபூபக்கர், மன்னர் மூஸாமன்ஸா (கி.பி. 1312 – 1337) இரு மன்னர்களும் புத்துலகு கண்டு பிடிக்க ஆப்ரிக்க கருப்பின முஸ்லிம்களுக்கும்– பெர்பெரி இனத்தவர்களுக்கும் பயணச் செலவு அளித்து அனுப்பி வைத்தனர். இவர்கள் அமெரிக்காவின் பிரேசில் பகுதியில் தரைஇறங்கி இருந்தார்கள். 15ம் நூற்றாண்டில் இவர்களின் எண்ணிக்கை அமெரிக்காவில் மூன்று கோடிக்கும் அதிகமாக இருந்தது.

கொலம்பஸுடன் சென்ற ஐரோப்பியர்கள் மட்டுமல்லாது இவர்களுக்குப்பின் சென்ற ஐரோப்பியர்களும் அமெரிக்காவில் கருப்பு இன முஸ்லிம்களைக் கண்டார்கள். இவர்களுக்குப்பின் சாரை சாரை வந்திறங்கிய ஐரோப்பியர்கள் மூன்று கோடிக்கும் அதிகமான கருப்பின முஸ்லிம்களையும் செவ்விந்தியர்களான பழங்குடியினரையும் அழித்தொழித்து கருப்பின அமெரிக்காவை வெள்ளை இன அமெரிக்காவாக ஆங்கிலேய ஐரோப்பியர்கள் மாற்றி அமைத்தனர். 1986ம் ஆண்டு கணக்குப்படி அமெரிக்காவின் மொத்த மக்கட் தொகை 226,526,000 பேர்களில் 188,373,000 பேர் பிரிட்டிஷ் வெள்ளையர்களாக இருக்கின்றார்கள். அதனால் தான் அமெரிக்காவில் "புராடஸ்டண்ட்" என்ற கிறிஸ்தவ அமைப்பே மேலோங்கி உள்ளது. 2005 செப்டம்பர் மாதம் லூசியான மாநிலத்தில் கத்ரீனா என்ற புயல் தாக்கிய போது ஆர்லியன்ஸ் நகர் முற்றிலும் அழிந்தது, அந்நகரில் கருப்பின மக்கள் வாழ்ந்ததால் அந்நகரில் நிவாரணப் பணிகள் முடுக்கிவிடப்படாமல். அமெரிக்க அரசு அந்நகரைக் கைவிட்டு விட்டதால் உலகக் கண்டனத்திற்கு இலக்கானது.

## ஸ்பெயினில் இஸ்லாமிய அழிவே மேற்கத்திய ஏகாதிபத் தியத்தின் துவக்கமாகும்

ஸ்பெயினின் இறுதி கலிபா அபூஅப்துல்லாஹ் 1492 ல் தோல்வியடைந்தார். அன்றிலிருந்து மேற்கத்திய ஏகாதிபத்தியத்தின் துவக்கப்புள்ளி விழுந்தது. இதன்பின் வாஸ்கோ–ட–காமா 1498 ல் இந்தியாவில் தரை இறங்கினார். அதன் விளைவாக போர்ச்சுக் கீஸியர்கள் 1523–ல் பஹ்ரைனில் ஊடுருவி இஸ்லாமிய ஆட்சியைக் கவிழ்த்தார்கள். 1798–ல் நெப்போலியன் அல்ஜீரியாவின் மீது படையெடுத்தார். இவ்விடைப்பட்ட காலங்களில் ஒட்டு மொத்த முஸ்லிம் உலகமும் இந்தியாவும், இந்தோனேஷியாவும், மலேயாவும், சிங்கப்பூரும், கீழ்வரும் இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி, போர்ச்சுக்கல், டென்மார்க் ஆகிய ஆறுநாடுகளின் பிடியில் உலகமே சிக்கித்தவித்தது.

20 ம் நூற்றாண்டுகளில் ஒருபுறம் ஆதிக்க சக்திகள் தங்களுக்குள் மோதிக் கொண்டன. மறுபுறம் காலனி நாடுகளின் விடுதலை

உணர்வுதுளிர்விட ஆரம்பித்தது. விடுதலை இயக்கங்கள் வெடித்துக்கிளம்பின.

1930 ல் பஹ்ரைன் போர்ச்சுக் கீஸியர்களிடமிருந்து விடுதலை பெற்றது. பிறநாடுகளும் ஒன்றன் பின் ஒன்றாக விடுதலைகீதம் பாடின. இந்த ஆதிக்கசக்திகள் பலநாடுகளுடையே நெருக்கடிகளையும், மோதல்களுக்கான விஷவித்துக்களையும் ஊன்றி விட்டுத்தான், சுதந்திரம் என்ற பெயரில் பொம்மை அரசுகளை உருவாக்கிச் சென்றார்கள்.

விடுதலை பெற்ற பெரும்பாலான நாடுகளில் ஜனநாயகம் வேரூன்றாதவகையில் மன்னராட்சி நிலை பெறுவதற்குத் தோதுவான ஏற்பாடுகளைச் செய்துவிட்டுத்தான் சென்றார்கள். மன்னர்கள் அமீர்கள்–சுல்த்தான்கள் போன்றோர்களை ஆட்சியில் அமர்த்தினார்கள். அல்லது ராணுவ ஆட்சியைத்திணித்து விட்டுச் சென்றார்கள். அந்தந்த நாடுகளின் இயற்கை வளங்களை மீண்டும் மீண்டும் கொள்ளையடிக்க மேற்குறிப்பிட்ட ஆட்சி முறைதான் சிறந்தது என்று அந்த ஏகாதிபத்திய வாதிகள் நினைத்தார்கள்.

அதன் காரணமாகவே சுதந்திரமடைந்த நாடுகளுக்கிடையே பிணக்குகளையும், போர்க் கொந்தளிப்புகளையும், மோதல்களையும் உருவாக்குகின்றவகையில் வட்டார நெருக்கடிகளையும், எல்லாப் பிரச்சனைகளையும் ஊண்டிவிட்டார்கள். உதாரணமாக ஏமன்–தெற்கு ஏமனுக்கிடையேவும், ஏமனுக்கும் சஊதி அரேபியாவுக்குமிடையே எல்லைப்பிரச்சனைகளையும், ஈரானுக்கும் – ஈராக்குக்குமிடையே எண்ணை வயல் பிரச்சனைகளையும், இந்தியா பாகிஸ்தானுக்குமிடையே காஷ்மீர் பிரச்சனைகளையும் உருவாக்கிச் சென்ற தோடு இஸ்ரேல் எனும் நச்சுவிதையை முஸ்லிம் நாடுகளுக்கு மத்தியில் ஊன்றிவிட்டுச் சென்றார்கள்.

அதோடு மாவீரர் ஸலாஹுத்தீன் ஐய்யூபி அவர்களின் இனத்தவர்களான குர்து இன முஸ்லிம்களை ஒன்று சேரவிடாமல் எந்த நாட்டிலும்பெரும் பான்மையாக ஆக்காமல், துருக்கி – ஈரான்– ஈராக்–சிரியா என பல்வேறு நாடுகளில் பிரித்து வசிக்க வைத்தார்கள். இருநூறு வருடங்களாகத் தொடர்ந்த சிலுவைப்போருக்கு மாவீரர் சுல்த்தான் ஸலாஹுத்தீன் முற்றுப்புள்ளிவைத்து சிலுவை வீரர்களை அரபுநாடுகளிலிருந்து விரட்டியதும், பெருமானார் (ஸல்) அவர்களின் கப்ரை இடித்துத் தரைமட்டமாக்க படைதிரட்டிச் சென்ற ரேணால்டு என்பவனை சிரச்சேதம் செய்ததால் ஏற்பட்ட வெறுப்புதான் காரணம்.



## இஸ்ரேல் நாடு உருவாதல்

கி.மு. 1240 ல் 2,16,535 சதுரமைல்கள் பரப்பளவு கொண்ட கானான்நாடு யூதர்களின் உட்பூசல்களால் 12 பகுதிகளாகச் சிதறி கி.மு. 1088 ல் சிரியாமட்டுமே மீதமிருந்தது. தாவூது நபியவர்கள் "ஜெபூஸ்" என்ற கிராமத்தை பெரிய நகரமாக நிர்மாணித்து அதற்கு ஜெரூஸலம் எனப் பெயரிட்டதோடு அங்கு பிரம்மாண்டமான மஸ்ஜிதுக்கு அஸ்திவாரமிட்டார்கள்.

இதன்பின் கி.மு. 970 ல் தாவூது நபியவர்களின் புதல்வர் சுலைமான் நபியவர்கள் தங்களின் தந்தையால் அஸ்திவாரமிடப்பட்டிருந்த இடத்தில் பிரம்மாண்டமான பள்ளிவாசலைக்கட்டி அதற்கு பைத்துல் முகத்தஸ் எனப் பெயர் சூட்டினார்கள்.

தங்களைத்திருத்த நபி மார்களின் எவ்வித போதனைகளையும் ஏற்றுக் கொள்ளாத யூதர்கள் இறைவனுக்கு மாறு செய்துவந்ததுடன் பைத்துல் முகத்தஸில் தங்கச் சிலைகளை நிறுவி சிலைத்தொழும்பர்களானார்கள். இந்நிலையில் பாபல் நாட்டு மன்னன் பக்து நஸ்ஸார் என்பவன் பைத்துல் முகத்தஸ் பள்ளியிலுள்ள 17000 தங்கச் சிலைகளைக் கைப்பற்றிக் கொண்டு பள்ளி வாசலைத் தரை மட்டத்திற்குத் தகர்த்ததுடன் அதில் தமது படைகளின் மூலம் மண்ணை நிரப்பியதுடன் இஸ்ரவேலர்களை கைது செய்து பாபல் நாடு அழைத்துச் சென்று விட்டான். இதன்பின் யூதர்கள் மீண்டும் புணருத்தாரணம் செய்த பள்ளியை அந்தாக்கியா மன்னன் "அனடோகஸ்" என்பவன் மீண்டும் பள்ளிவாசலைத் தகர்த்து ஏர்கொண்டு உழுதுவிட்டுச் சென்றான். இவ்வளவு கொடுமைகளுக்குள்ளாகியும் திருந்தாத யூதர்கள் ஜகரிய்யா நபியர்களை ரம்பத்தால் அறுத்துக் கொன்றார்கள் யஹ்யா நபியவர்களைக் கொலை செய்தார்கள். ஈசா நபியவர்களை ரோம் தளபதி பிலாத்திற்குக் காட்டிக் கொடுத்தார்கள். கி.பி. 126ல் ரோம் மன்னன் ஹட்ரியன் என்பவனும் யூதர்களைக் கொன்றொழித்தான்.

கி.பி. 323 ல் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய மன்னன் மகாகான்ஸ் டன்டைன் என்பவர் யூதர்களை நாட்டைவிட்டும் வெளியேற்றினார். இம்மன்னரின் காலத்திலிருந்து தான் யூதர்களைக் கொடுமை படுத்தும் படலம் ஐரோப்பியநாடுகளில் அரங்கேறியது. மகா கான்ஸ்டன்டைன் காலத்திலிருந்தே உலக அரசியலிலிருந்து யூதர்கள் துரத்தியடிக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள். என்றாலும் இவர்களின் கர்வமும்–பொறாமையும் குறைந்தபாடில்லை. இதன் பின் போர்ச்சுக்கல், ஸ்பெயினிலிருந்து முழுமையாகத் துரத்தப்பட்டார்கள். இங்கிலாந்தில் இரண்டு முறையும், பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்து, ரஷ்யா இத்தாலி, ஜெர்மன், செக்கோஸ்வாகியா போன்றநாடுகளிலிருந்து

இரண்டாம்உலகப் போர்வரை யூதர்கள் துரத்தியடிக்கப்பட்டுக் கொண்டே இருந்தார்கள்.

கடந்த இரண்டாயிம் ஆண்டுகளாக மனித குலத்திற்கு எதிரான எல்லாவகையான குற்றங்களையும் யூதர்கள் புரிந்து வந்ததால் பலநாடுகளில் யூதர்களை ஒதுக்கி அசிங்கமான இடங்களில் குடியமர்த்தப்பட்டார்கள். 1933ல் ஹிட்லர் அறுபது லட்சம் யூதர்களைக் கொன்று குவித்தார். உலகம் முழுதும் இழிவுபடுத்தப்பட்டு துரத்தப்பட்ட யூதர்களுக்கு இஸ்லாமிய ஆட்சியாளர்களே புகலிடம் தந்து தொழில்கள் செய்யவும் திருக்குர் ஆன் பிரதிகளை அச்சிட்டு விநியோகம் செய்யவும் யூதர்களுக்கு அனுமதி யளித்தார்கள். கி.பி. 636 ல் யர்மூக் வெற்றியால் சிரியா முழுவதும் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்தது.

## முதலாம் உலகப் போர்

அன்று ஐரோப்பிய ஆட்சியாளர்கள் அனைவரும் நெருங்கிய உறவினர்களாக இருந்தார்கள். தங்களுக்குள் ஏற்படும் பிரச்சனைகளை ஐரோப்பாவின் பாட்டி என அழைக்கப்பட்டுவந்த விக்டோரியா மகாராணி அவர்கள் முன்னிலையில் சுமுகமாகத்தீர்த்துக் கொள்வார்கள். 1901 ல் மகாராணி இறந்தார். 1910 ல் மகாராணியின் மகன் ஏழாம் எட்வர்டும் இறந்தபின். ஐரோப்பாவின் ராஜகுடும்பங்களை இணைத்திருந்த பாசச் சங்கிலி முற்றிலுமாக அறுந்துவிட்டநிலையில் பல ஆண்டுகளாக தங்களுக்குள் புகைந்து கொண்டிருந்த பகை உணர்ச்சி கொப்பளித்து வெளியே வர ஆரம்பித்தன.

இந்நிலையில் உலகின் ராணுவ பலம் உள்ள நாடாக பிரான்ஸும்–பெரும்கப்பற்படை கொண்டநாடாக இங்கிலாந்தும் இருந்து கொண்டிருக்கும் போது இருநாடுகளையும் விட ராணுவபலத்தையும் கப்பற்படையையும் ஒரு சேரப் பெருக்கியது ஜெர்மனி. இதன்விளைவாக பிரான்ஸும், இங்கிலாந்தும், ரஷ்யாவும் தங்களுக்குள் கூட்டணி அமைத்துக் கொண்டன. உடனே ஜெர்மனியும் ஆஸ்திரியாவுடன் தனது கூட்டை புதுப்பித்துக் கொண்டது. இந்நிலையில் 1914 ல் ஆஸ்திரியாவின் பட்டத்து இளவரசர் ஃபெர்டிணான்டையும், அவரின் மனைவியையும் செர்பிய நாட்டுத் தீவிரவாதிசுட்டுக் கொன்றான்.

இதனால் ஆத்திரமடைந்த ஆஸ்த்திரியா செர்பியா மீது போர் தொடுத்தது. ஜெர்மனி ஆஸ்த்திரியாவுக்காக போரில் இறங்கி ரஷ்யா மீது போர் பிரகடனம் செய்தது. அதோடு பெல்ஜியத்தைத் தாக்கியது. இவ்வாறு உலகப் போர் மூண்டு, இந்தப் போர் நான்கு வருடங்கள் நடந்தன. இறுதியில் 1918 நவம்பர் 11ம் நாள் ஜெர்மனி சரணடைந்தது. சுமார் 30 நாடுகள் பங்கு கொண்ட முதலாம் உலகப் போர் உலக வரைபடத்தையே மாற்றி வரைந்தது. சில நாடுகள் இரண்டாகப்



பிரிந்தன. பலநாடுகளுக்கு விடுதலை கிடைத்தது. பலபுதிய நாடுகளும் பிறந்தன.

## முதலாம் உலகப் போர் விளைவு

ஜெருஸலத்திற்கருகே உள்ள "ஸியோன்" மலையின் நினைவாக "டாக்டர் வைஸ்மான்" ஸியோனிஸ்ட் என்ற யூத தீவிரவாத இயக்கத்தைத் தோற்றுவித்தார். இவ்வியக்கம் "தியோடர் ஹேர்ஷில்" என்பவரின் முயற்சியால் தீவிரமடைந்தது. ஹேர்ஷல் எழுதிய "யூதநாடு" என்ற நூல் சியோனிஸ்ட்டுகளுக்கு வேதப் புத்தகமாகியது 1896 ல் நடந்த பொதுக் குழுக்கூட்டத்தில் பேசிய ஹேர்ஷல் நமக்கு ஒரு தாயகம் வேண்டும். அது ஜெரூஸலத்திற்கருகே அமைய வேண்டும் எனக்குறிப்பிட்டார். இப்பொதுக்குழு கூட்டத்திற்குப்பின் அமெரிக்காவின் பெரும் பணக்காரர்களான யூதர் இருவர் யூதர்களுக்குத் தனி நாடு அமைத்துத் தருமாறு அமெரிக்காவை வற்புறுத்தினார்கள். யூதர்களின் வாக்கு வங்கியைச் சார்ந்திருந்த அமெரிக்கத்தலைமைக்கு இந்த வேண்டுகோள் லாபகரமானதாகத் தெரிந்தது.

இந்நிலையில் முதல் உலகப் போரின் போது இங்கிலாந்து அமெரிக்காவிடம் உதவி கோரியது. அப்போது அமெரிக்கா உதவி செய்வதாக இருந்தால் மத்திய கிழக்கில் யூதர்களுக்கென தனிநாடு அமைவதற்கு நீ உதவி செய்ய வேண்டும் என்றது இங்கிலாந்தும் அதை ஏற்றுக் கொண்டது.

"துருக்கி–பின்லாந்து" கலப்பினத்தவர்களான" பால்க்கர்கள்" கி.பி. 700ல் அனைவரும் யூதமதத்தைத் தழுவினார்கள். இதன் பின் ரஷ்யர்களாலும்–ரோமர்களாலும் இவர்கள் தோற்கடிக்கப்பட்டு ஐரோப்பா முழுவதும் சிதறடிக்கப்பட்டு அலைந்து திரிந்தார்கள். பலஸ்தீனத்தில் பூர்வீகமான யூதர்களின் எண்ணிக்கை அறுபதாயிரம் மட்டும்தான் ஆனால் 1918 லிருந்து 1930க்குள் பால்க்கர்களான யூதர்கள் பலஸ்தீனத்தில் நுழைந்து ஆறுலட்சமாகப் பெருகிவிட்டார்கள். யூதர்களின் தீவிரவாத இயக்கமான "ஸியோனிஸ்ட்டையும்–ஹகனா" என்ற இரு இயக்கங்களையும் தோற்றுவித்தவர்கள் பால்க்கர்களான யூதர்கள்தான்.

முதலாம் உலகப் போருக்குப்பின் ஆங்கிலேயர்கள் பாலஸ்தீனத்தையும், பிரான்ஸ் லெபனானையும் பிரித்துப் பங்கிட்டுக் கொண்டார்கள். அமெரிக்காவும், இங்கிலாந்தும் சேர்ந்து பலஸ்தீன அரபிகளுக்கெதிராக 1916ல் "சைகஸ் பைகோ" உடன்படிக்கை கொணர்ந்தார்கள். "1917ல் பார்ஃபர்" பிரகடனம் வெளியிடப்பட்டது. 1918ல் 45000 சதுர மைல்கள் கொண்ட பாலஸ்தீன் பிரிட்டிஷ் "மாண்டேட் நாடானது" 45000 சதுர மைல்கள் கொண்ட பாலஸ்தீனத்தில் ஆங்கிலேயர்கள் 32000

மைல்களை வெட்டியெடுத்து அதற்கு "ஜோர்டான்" என்ற பெயரைச் சூட்டி தனி நாடாக்கினார்கள். 1947 நவம்பர் 29 ல் நடந்த ஐநாசபைக் கூட்டத்தின் தீர்மானப்படி 13000 மைல்கள் கொண்ட பலஸ்தீனத்தில் எட்டாயிரம் மைல்களைப் பிரித்து யூதர்களுக்கு "இஸ்ரேல்" என்ற தனி நாடு அமைக்கப்பட்டது. ஹகனா என்ற இயக்கயூதர்கள் "தைர்யாசீன்" என்ற நகரில் வாழ்ந்து வந்த அரபிகளைப் படுகொலை செய்தார்கள். ஸியோனிஸ்ட்டுகள், தைபீரியா, ஸமக், ஷைஃபா, பைஸான் ஜாபா" ஆகிய ஊர்களில் வாழ்ந்துவந்த அரபிகளைப் படு கொலை செய்ததுடன் பத்துலட்சம் அரபிகளைச் சொந்தநாட்டைவிட்டும் விரட்டியடித்தார்கள். இதன்பின்புதான் இங்கிலாந்து தனது மாண்டேட் ஆட்சியை மே 14ல் வாபஸ் வாங்கியது. மாண்டேட் வாபஸானதும், எகிப்தும், ஜோர்டானும் இஸ்ரேலை எதிர்த்தன ஆனால் பலஸ்தீனத்து அரபிகளுக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த மேற்கு கரைப்பகுதியான 5000 மைல்கள் பரப்பவை இஸ்ரேல், எகிப்து, ஜோர்டான் தமக்குள் பங்கு போட்டுக் கொண்டன. பலஸ்தீனத்து அரபிகள் அகதிகளாக்கப்பட்டார்கள். அமெரிக்கா, பிரிட்டிஷ், பிரான்ஸ், ரஷ்யா நாடுகளின் தயவில் தான் யூதர்களுக்கு இஸ்ரேல் என்ற தனிநாடு அமைக்கப்பட்டது.

ரோமர்களாலும், ஐரோப்பியர்களாலும் விரட்டியடிக்கப்பட்ட யூதர்களுக்கு புகலிடம் தந்தது. இஸ்லாமிய நாடுகளும் இஸ்லாமிய ஆட்சியாளர்களும் தான். யூதர்களை வேதம் கொடுக்கப்பட்ட நமது சகோதரர்கள் என்ற மனப்பான்மையில் அரவணைத்துக் கொண்ட இஸ்லாமிய ஆட்சியாளர்கள் அவர்களைத் தொழில் செய்யவும் அனுமதித்தார்கள். அச்சகம் அமைத்த யூதர்களுக்கு திருக்குர்ஆனை அச்சிட்டு விநியோகம் செய்யவும் அனுமதி அளித்தார்கள். இவ்வனுமதியைப் பயன் படுத்திக் கொண்ட யூதர்கள் கபடப் போக்கில் திருக்குர்ஆனில் விஷமத்தனம் புரிய ஆரம்பித்தார்கள். தாம் புரிந்ததோடு தப்பும் தவறுமாக திருக்குர்ஆனை மொழிபெயர்க்கவும், பெருமானார் (ஸல்) அவர்கள் மீது வசைபாடவும் ஐரோப்பியர்களையும் தூண்டினார்கள்.

## அருள்மறை குர்ஆனின் அபாரசக்தி

இன்றுவரை உலகத்தில் தோன்றியுள்ள வேதங்களில், நூல்களில் திருக்குர்ஆன் ஒன்றே, ஈடு இணையற்ற திருமறையாக உள்ளது. சமுதாயச் சட்டநூலாகவும், இனிமைமிக்க இசை நூலாகவும், கலப்பட மற்ற காவியமாகவும், தத்துவங்களின் கருவூலமாகவும், நேரடிவினை பயன்களை உருவாக்கும் உன்னதமான அறிவியல் ஆய்வேடு என்னும் பண்புகள் அனைத்தையும் ஒருங்கே தன்னுள் உள்ளடக்கியிருக்கும் அற்புதமான வேத நூல் என அதனை ஆராய்ந்த உலக அறிஞர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

ஒவ்வொரு எழுத்தும் சட்டமாகிவிட்ட ஒப்பற்ற நூல் என்று லாமர்டைன்



என்ற பிரஞ்சுக்கவிஞரும், கருத்தைக் கவருகின்ற அறிவியல் நிலைக்கு ஆட்படுத்துகின்ற முஸ்லிம் மறை என்று டாக்டர் ஏ.ஜே. ஆர்பரியும், ஒப்புக்காட்ட முடியாத பண்ணுடன் கூடிய இன்னிசையின் வெறும் ஓசையே மக்களை கண்ணீர் சிந்தச் செய்து மெய்மறக்கும் மகிழ்ச்சியை ஊட்டுகின்றது என்று இஸ்லாத்தில் இணைந்த எம். மர்மடூக் பிக்தால் அவர்களும், இஸ்லாமியர்களுடைய சமயத்தின் ஒழுக்க நெறியாக இருப்பதோடல்லாமல் அவர்களுடைய சமய செயல் முறைகளுக்கும் அவர்களுடைய சமுதாய உரிமைச்சட்ட மூலக் கோட்பாடுகளுக்கும் பாட நூலாக அமைந்துள்ளது என்று "ஸர்எட்வர்டு டெனிஸன் ரோஸ் என்பவரும்;

ஒரு நூல் அதனுடைய நிகரமுடிவுகளைக் கொண்டும் மனிதத் தன்மையின் மிக ஆழமான உணர்வுகள் மிகச் சிறந்த நற்பண்புகள் ஆகிய அனைத்தின் மீதும் அதன் தாக்கத்தை மதிப்பிடப்படுமாயின் திருக்குர்ஆன் உலகின் மிகச்சிறந்த காவியங்களின் ஒன்றெனத்திகழும் என்று "மேஜர் ஏ.ஜே. லியோனார்டு அவர்களும் கூறுகின்றார்கள்.

"கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் ஐரோப்பாவின் முன்னணி மாத இதழ் ஒன்று உலகப்பல்கலைக் கழகங்களின் தலைசிறந்த பேரசிரியர்களுக்கு எழுதிய கடிதத்தில் உலகிலுள்ள மிகச் சிறந்த காவியங்களின் பட்டியலைக் கேட்டிருந்தது. அந்த வேண்டுகோளுக்கேற்ப நூற்றுக் கணக்கானபட்டியல் வந்து சேர்ந்தன. ஏசுநாதருக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட "ஹோமரின்" இலியட் காவியத்திற்கு முதல் இடமும், திருக்குர்ஆனுக்கு இரண்டாம் இடமும் அளிக்கப்பட்டது. அந்தத் தீர்ப்புக் குழுவில் இருந்தவர்களில் பெரும்பாலோர் அரபி மூலத்தைப் படிக்காத ஐரோப்பியர்களாவார்கள். ஐரோப்பிய மொழிகளின் தெளிவற்ற கருத்துத் தடத்தின் அடிப்படையிலேயே தங்களுடைய மதிப்பீட்டை அளித்திருந்தனர், என்பதையும் நினைவு கூர்ந்தே ஆக வேண்டும்." என்று பண்டிட் சுந்தர்லால் அவர்கள் தமது கீதையும், குர்ஆனும் என்ற நூலில் குறிப்பிடுகின்றார்கள். ஆனால் அமெரிக்காவைச் சேர்ந்த மைக்கேல் Hஹார்ட் எழுதிய நூறு நபர்கள் எனும் நூலில் குர்ஆனை உலகிற்களித்த முஹம்மது நபி (ஸல்) அவர்கள் முதல் இடத்திலும் இலியட் எழுதிய ஹோமர் 94 வது இடத்திலும் இடம் பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மற்றவேதங்கள் அனைத்தும் அல்லாஹ்வினுடைய கருத்துக்களாகவே இருந்தன. அவைகளைப் பெற்ற நபிமார்கள் தங்களுக்குத் தெரிந்த மொழிகளில் அக்கருத்துக்களை மக்களுக்கு எடுத்துரைத்தார்கள். திருக்குர் ஆனின் சொற்கள் முழுக்க முழுக்க அல்லாஹ்வுடையதாகும். இதனால் தான் அல்லாஹ் பெருமானாரிடம் வஹீ வரும் போது "குர்ஆன்

அருளப்படும் போது நீர் அவசரப்பட்டு ஓதவேண்டாம். அதனை ஒன்று படுத்தி உம்மை ஓதச் செய்வது எம்முடைய பொறுப்பு" என அல்லாஹ் குர்ஆனில் கூறுகின்றான். எனவே பெருமானாரின் அற்புதங்களில் முதன்மையானது குர்ஆனே ஆகும் என உலகவரலாற்று ஆசிரியர் இப்னுகல்தூண் அவர்கள் தமது 'முகத்திமா'வில் குறிப்பிடுகின்றார்கள்.

## மொழி பெயர்ப்பில் மோசடிகள்

தெய்வீகத் திருமறையான திருக்குர்ஆனை ஐரோப்பியர்கள் தங்கள் மொழிகளில் மொழி பெயர்க்கும் போது பல மோசடிகளைச் செய்துள்ளனர். மொழி பெயர்ப்பாளர்கள் அனைவரும் ரோமன் கத்தோலிக்கர்களாக இருந்தபடியால் தங்களின் திருச்சபைகளின் கட்டளைக்கேற்ப திருக்குர்ஆனின் அமைப்புகளை மாற்றியும் பொருளைத்திரித்தும் மொழி பெயர்த்தனர். "சிலுவையுத்தப் பிரச்சாரர்களில் ஒருவரான (டென்மார்க்) டேனிஷைச் சேர்ந்த மதகுரு பீட்டர் என்பவரின் தூண்டுதலால் ஆங்கிலேய நிபுணர் "ராபர்ட் ஸ்ரெடன்ஸீஸ்" என்பவரும் மற்றொரு ஜெர்மானியரும் இணைந்து கிறிஸ்தவ மக்களின் மதஉணர்ச்சிகளைத் தூண்டும் வகையில் தவறுகளாலும் தப்பெண்ணங்களாலும் நிறைந்த ஆங்கிலேய மொழி பெயர்ப்பை கி.பி. 1143 ல் மொழி பெயர்த்து வெளியிட்டார்கள்." என்று கிறிஸ்தவ அறிஞர் டாக்டர் A.J. ஆர்பரி கூறுகின்றார்.

கி.பி. 1647ம் ஆண்டு பிரெஞ்சுப் பிரமுகர் "ஆன்டாஞ்ஜாரோர்" என்பவரால் வெளியிடப்பட்ட பிரெஞ்சு மொழியில் வெளியான மொழி பெயர்ப்பில் தப்பும் தவறுகளும் அதிகம் காணப்பட்டன இரண்டு ஆண்டுகளுக்குப்பின் இதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளிவந்தபோது, அரபியிலிருந்து பிரெஞ்சுக்கு மொழிபெயர்க்கப்பட்ட முஹம்மதின் அல்குர்ஆன் எனப் பெயரிடப்பட்டிருந்த தோடு துருக்கியரின் வீண்தற்பெருமைகளை அறிய ஆர்வமுள்ளவர்களின் ஆவலை நிறை வேற்றுவதற்காக ஆங்கிலத்தில் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது என அம்மொழி பெயர்ப்பில் குறிப்பிட்டிருந்தார்கள். இவ்வாறாக கி.பி. 1143 லிருந்து 1876 வரை பத்துக்கும் அதிகமான மொழி பெயர்ப்புகள் ஐரோப்பிய மொழிகள் பலவற்றில் தப்பும் தவறுமாகத் திட்டமிட்டே மொழி பெயர்ப்புச்சதி நடந்து கொண்டு வந்தது. இதில் வேதனை என்னவென்றால் ஐரோப்பிய அறிஞர்களில் நாம் யாரையெல்லாம் நல்லவர்கள் என்று கருதி இருந்தோமோ அவர்கள் எல்லாம் திருக்குர்அன் மொழி பெயர்ப்பின் சதியாளர்களாகவே இருந்திருக்கின்றார்கள்.

"மனிதத்துவம்–நாகரீகம்– என்றால் என்ன? என்பதை மனிதர்கள் அறியாதிருந்த காலத்தில் திருக்குர்ஆன் வேதம் உலகிற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. குர்ஆன் தனது போதனைகளால் மனித மனங்களில்



அன்புணர்ச்சியை உயிர்பெறச் செய்து உலக நிலையிலேயே ஒரு திருப்பத்தை ஏற்படுத்தி விட்டது" என்று வானளாவப் புகழும் "தாமஸ் கார்லைல் என்பவர்" பிறிதொரு இடத்தில் "படிப்பதற்காக நான் எடுத்துக் கொண்ட நூல்களிலேயே சளிப்பூட்டி மனச் சோர்வடையச் செய்யும் செப்பமற்ற கரடு முரடான கூட்டுக் குவியலான நூல் குர்ஆன்தான். இது ஐரோப்பியனை முழுதும் படிக்கத் தூண்டாது என்று தீர்ப்பளிக்கின்றார்.

"சாமுவேல் ஜான்ஸன், கிப்பன், கார்லைல், சர்தாமஸ் ஆர்னால்டு" போன்ற பல உகப்புகழ் பெற்ற எழுத்தாளர்கள் இஸ்லாத்திற்கு எதிராகச் செய்யப்பட்ட அற்பத்தனமான பிரச்சாரங்களை நாவால் கண்டித்தாலும் இவர்கள் அனைவரின் எழுத்துக்களில் சில சமயங்களில் இஸ்லாத்திற்கு எதிரான தப்பெண்ணங்களை உருவாக்கும் முயற்சிகள் தொடர்ந்தே வந்துள்ளன. அதுமட்டுமல்ல போப் மூனறாம் இன்னசென்ட், இத்தாலியக் கவிஞர் தாந்தே, வால்ட்டர், பேகன் ஆகியோர் இஸ்லாத்திர்கு எதிராகவே செயல்பட்ட சிறு மதியாளர்களாவார்கள்.

## அருள்மறையை அவமதித்த அமெரிக்கர்கள்

அமெரிக்கா, ஆப்கானிஸ்தான் ஈராக்கின் முஸ்லிம் கைதிகளை கியூபாவிலுள்ள குவாண்டனமோ–பே–எனும் சிறைச்சாலையிலும். ஈராக்கின் அபூகுரைப் சிறைச்சாலைகளிலும் அடைத்துச் சித்தரவதை செய்து கொண்டு வருகின்றது. இக்கைதிகளுக்கு மன உளைச்சலை உருவாக்க திருக்குர்ஆனை ஜெயலர்கள் அவமதித்தனர். குவாண்டனமோ, சிறைச்சாலையின் கழிப்பறைகளில் கால்பதித்து அமரும் இடத்தில் குர்ஆனை பரப்பிவைத்தார்கள், கழிவறைச் சாக்கடை செல்லும் இடத்திலும் குர்ஆனைப் பரத்தி வைத்தார்கள். இதனால் வெகுண்ட 13 ஏமன் நாட்டுக்கைதிகளான முஸ்லிம்கள் தற்கொலை செய்து கொள்ள முயன்றார்கள் என்று கைதிகளின் வழக்கறிஞர் மார்ச் பால்காப் என்பவர் தெரிவித்தார்.

இச் செய்தி மே 9 த் தேதி 2005 நியூஸ் வீக்கில் பிரசுரமாகியது. இச்செய்தியைப் படித்த பாக்கிஸ்தான் கிரிக்கெட் வீரர் இம்ரான்கான் மே 16 ம் தேதி பத்திரிக்கையாளர் கூட்டத்தைக் கூட்டி இந்நிகழ்ச்சியை வன்மையாகக் கண்டித்தார். அப்போதுதான் "இஸ்லாமியர்கள் தங்களை என்ன செய்தாலும் பொறுத்துக் கொள்வார்கள். ஆனால் திருக்குர்ஆனையும், நபிபெருமானார் அவர்களையும் ஏதாவது சீண்டினால் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள் என்று அமெரிக்காவுக்கு உரைத்தது. இஸ்லாமியர்களின் கோபத்தின் வெப்பத்தைக் கண்ட அமெரிக்க அதிபர் புஷ் அதிர்ந்தார். அமைச்சர் "கொண்ட லீசா ரைஸ்" மன்னிப்புக் கோரினார்.

வங்கதேசத்தைச் சேர்ந்த "ஐரீன் சுபைதா கான்" என்ற பெண்மணி 2001ல் லண்டனைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் ஆம்னஸ்டியின் தலைமைப் பொறுப்பேற்றார். அந்த அமைப்பின் ஏழாவது பொதுச் செயலாளரும் முதல் முஸ்லிம் பெண்மணியுமான இவர் பத்திரிக்கையாளர்களைக் கூட்டி ஆகஸ்ட்டு 2005ல் "ஆம்னஸ்டி இண்டர் நேஷனல்" என்ற மனித உரிமை அமைப்பின் வருடாந்திர அறிக்கை அளித்தார். அதில் "குவாண்டனமோ சிறையில் அமெரிக்கா மிருகத்தனமாக கொடுமையான முறையில் மனித உரிமைகளை நசுக்குகின்றது. முன்னால் சோவியத் யூனியனின் கொடுமைக் கூடமான குலாக்-கின் மறுபதிப்புதான் குவாண்டனமோ. மற்ற நாடுகளில் ஜனநாயக மனித உரிமை பாதுகாப்பைப்பற்றி வேதம் ஓதும் புஷ் அரசாங்கம் சொந்த விஷயத்தில் அனைத்து வித அடிப்படை உரிமைச் சட்டங்களையும் காற்றில் பறக்கவிடுகிறது என்று அறிக்கையில் குறிப்பிட்டார்.

பாகிஸ்தானிலிருந்து (பெஷாவர்) வெளிவரும் ஆங்கில இதழின் ஆசிரியர் "பதர் ஸமான் பதர்" என்பவரும் சிறைக் கைதியாக அங்கிருந்தார். அவரும் மற்ற சில கைதிகளும் குவாண்டன்மோ சிறையின் கழிப்பறைகளைச் சுத்தம் செய்யும் போது ஒரு அமெரிக்க ராணுவத்தான் திருக்குர்ஆனைக் கழிப்பறையில் வீசியெறிந்தான். இதனால் கோபமுற்ற அனைவரும் சப்தம் போட்டதும், அமெரிக்கக் கமாண்டர் வந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். ஐரீன் சுபைதாகான் என்ற பெயரைக் கேட்டாலே அமெரிக்க அதிபர் ஜார்ஜ்புஷ்ஷுக்கு வெறுப்பாகவும், பாதுகாப்புச் செயலாளர் "ரம்ஸ் பீல்டிற்கு இரத்தம் கொதிக்கின்றதாம்.

## ஒவ்வொரு கர்பலாவிற்குப் பின்னும் இஸ்லாம் புத்துயிர்பெறுகின்றது

ஒவ்வொரு சோதனைகளுக்குப் பின்பும் இஸ்லாம் தனது சகிப்புத்தன்மையால் எதிரிகளை வென்றது. அவர்கள் இஸ்லாத்தின் பால் ஈர்க்கப்பட்டார்கள். செங்கிஸ்கானின் எழுச்சியால் இஸ்லாமியர்களின் இரத்தம் சிந்தப்பட்டது இறுதியில் மங்கோலியர்கள் இஸ்லாத்தில் இணைந்து இஸ்லாமியப் பிரச்சாரகாரர்களாக மாறினார்கள். தங்கள் இன்னுயிரையும் ரஷ்யாவின் சார்மன்னர்களிடம் அளிக்கத் தயங்கவில்லை இத்தகைய சம்பவங்கள் இஸ்லாமிய வரலாற்றின் வழி நெடுகிலும் காணலாம்.

குவான்ட்னமோ சிறையில் சில குர்ஆன் பிரதிகள் இழிவு படுத்தப்பட்டன. அதன் விபரம் வெளியே தெரிந்தபோது குர்ஆனில் என்னதான் இருக்கின்றது என்பதை அறிய அமெரிக்கர்கள் ஆவலாக ஆங்கில மொழிபெயர்ப்புகளை வாங்கிப்படிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.



அமெரிக்காவில் "கவுன்சில் ஆப் அமெரிக்கன் இஸ்லாமிக் ரிலேஷன்" என்ற அமைப்பின் தலைவர் "இப்றாஹீம் ஹூப்பர்" என்பவர் திருக்குர்ஆனின் ஆங்கில மொழி பெயர்ப்புகளைப் படிக்க விரும்புபவர்கள் தங்களின் முகவரியைத் தெரியப்படுத்துங்கள்" என்ற அறிவிப்பை அமெரிக்கப் பத்திரிக்கைகளில் விளம்பரமாக வெளியிட்டார். 4000 அமெரிக்கர்களுக்கு மேலானவர்கள் தங்களுக்கு வேண்டும் என்று முகவரியைத் தந்தனர். திருக்குர்ஆன் மொழிபெயர்ப்புப் பிரதிகள் போதாததால் அல்லாமா யூசுப் அலி அவர்களின் புகழ்பெற்ற ஆங்கில மொழி பெயர்ப்பு 52000 பிரதிகளுக்கு ஆர்டர் கொடுத்துப் பெற்று வினியோகம் செய்துவருகின்றார்கள். "ஒவ்வொரு கர்பலாவிற்குப்பின்பும் இஸ்லாம் புத்துயிர் பெறுகின்றது" எனும் அல்லாமா இக்பால் அவர்களின் கவிதையின் பொருள் நிதர்சனமாகத் தெரிகின்றது.

1999ம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் துருக்கி நாட்டின் ஒரு கடற்படைத் தளத்தில் நடந்த ராணுவ நிகழ்ச்சிக்கு இஸ்ரேலிய தரங்கெட்ட யூத நாட்டியப் பெண்களும் வரவழைக்கப்பட்டிருந்தார்கள். மிகவும் ஒழுங்கீனமான முறையில் நடனமாடிக் கொண்டிருந்த அப்பெண்களின் காலுக்கடியில் ஒரு ராணுவ ஜெனரல் புனிதத் திருக்குர்ஆனைக் கிழித்துப் போட்டான். திடீரென ஒளிப் பிழப்புகள் அப்பகுதியை ஆட்கொண்டன. பின்பு கடல் கொந்தளித்து நெருப்பு ஜுவாலைகளைக் கக்கியது. அந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களின் சடலங்கள் வெடித்துச் சிதறின. இதன் பின்பு நடுக்கடலில் பயங்கர சப்தத்துடன் பொங்கியெழுந்த பேரலை அக்கடற்படைத்தளத்தையே பெயர்த்தெடுத்துத் தூக்கியெறிந்துவிட்டது. இதைத் தொடர்ந்து அப்பகுதியைச் சுற்றி ஏற்பட்ட மிகப் பெரிய பூகம்பம் பல்லாயிரக் கணக்கான மக்களை அழித்தது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அமெரிக்கா, இஸ்ரேலிய ராணுவ வீரர்கள், கூத்துக் கும்மாளமடித்த சுமார் 3000 பேரில் ஒரு சடலத்தைக்கூட கண்டுபிடிக்கமுடியவில்லை. தகவல் கத்மே நுபுவ்வத் (லண்டன்) ஏப்.2000 மறு வெளியீடு தஃமீரே ஹயாத் ஜுன் 2000)

நபி(ஸல்) அவர்களிடம் ஒருவர் வஹீ எழுதக் கூடிய பொறுப்பில் இருந்தார். (இவர் கிறித்துவராகயிருந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்) அதன் பிறகும் தம் மாறி முஷ்ரிகீன்களோடு சேர்ந்து கொண்டார். (நான் எழுதிக் கொடுக்கும் விஷத்தைத்தான் இந்த முஹம்மது பிரச்சாரம் செய்கிறார் என பிதற்றவும் தொடங்கினார். இதைக் கேள்விப்பட்ட நபி (ஸல்) அவர்கள் இவரை பூமி ஏற்றுக் கொள்ளாது என்று முன்னறிவுப்புச் செய்தார்கள். அதன் பிறகு அந்த மனிதர் இறந்த பிறகு அவர் இறந்த ஊருக்கு அபூதல்ஹா (ரலி) அவர்கள் சென்றார்கள். அங்கே அவர் புதைக்கப்பட்ட இடத்திலிருந்து வெளியே

வீசி எறியப்பட்டிருந்தார். இவரை ஏன் இப்படி தூக்கி எறிந்து விட்டீர்கள், என அங்குள்ளவர்களிடம் வினவிய போது இவரை பலமுறை முயற்சி செய்து புதைத்தோம். ஆனால் பூமி இவரை ஏற்றுக் கொள்ளவில்லை, என்றனர். (முதல் நாள் புதைத்தபின் அடுத்த நாள் காலை பூமிக்குவெளியே கிடந்தார். இது முஹம்மதுடைய தோழர்களின் வேலை. அவர்கள் தான் தோண்டி எடுத்துள்ளனர், என எண்ணி மிக ஆழமாக குழி வெட்டி யாரும் தோண்ட முடியாத அளவுக்கு புதைத்தனர். மறுநாளும் பூமி அவரைத் தூக்கி எறிந்து விட்டது (நூல்: புஹாரி முஸ்லிம்).

## யூதர்கள் நபிபெருமானாருக்கு அளித்த தொல்லைகள்

“நெபுகாட் நஸ்ஸார்” என்ன பாபிலோனிய மன்னனால் ஜெருஸலத்திலிருந்து நாடு கடத்தப்பட்ட யூதர்களில் ஒருபிரிவினர் ஹிஜாஸ் நாட்டிற்கருகே உள்ள தீமா, வாதிஉல்குரா போன்ற பகுதிகளில் குடியேறி அங்கு வசித்து வந்த அமாலிக்கா கூட்டத்தினரின் உடமைகளைப் பறித்துக் கொண்டு அவர்களை அப்பகுதிகளைவிட்டு வெளியேற்றிவிட்டனர்.

இந்த யூதர்களில் ஒரு பிரிவினர் யத்ரிப் நகரில் குடியேறினர். யூதர்கள் சிறுபான்மையினராக இருந்தாலும் வியாபாரமும் வட்டித் தொழிலும் செய்து வந்ததால் செல்வந்தர்களாக இருந்தார்கள். இவர்களுக்கு முன் யமன் நாட்டிலிருந்து வலசை கிளம்பி யத்ரிப் (மதீனா) நகரில் தங்கிவிட்ட அவ்ஸ்கஜ்ரஜ் இரு கூட்டத்தினருக்கும்நீங்காத பகை இருந்து கொண்டிருந்தது. இதைச் சாதகமாக யூதர்கள் பயன்படுத்தி இரு கூட்டத்தினரையும் தங்களின் கைப்பிடிக்குள் கொணர்ந்தார்கள்.

பெருமானார் (ஸல்) மதீனாவில் நுழைந்ததும் முதலில் “அவ்ஸ் கஜ்ரஜ்” என்ற கூட்டத்தினரை ஒன்றுபடுத்தி அன்ஸார்கள் எனும் பெயர் சூட்டினார்கள். இது யூதர்களுக்குப் பேரிடியாக அமைந்தது. இதன் பிறகு பெருமானாருக்கு யூதர்கள் பெரும் தொல்லைகள் கொடுக்க ஆரம்பித்தார்கள். சமயம் கிடைக்கும் போதெல்லாம் பெருமானருக்கும், முஸ்லிம்களுக்கும் துன்பத்தையே அளித்து வந்தார்கள்.

இதன்பின் பெருமானர் (ஸல்) அவர்களை முடக்கிவிடவேண்டும் என்று முடிவுக்கு வந்த யூதர்கள் லபீது என்ற யூதனின் மூலம் சூனியம் செய்தார்கள். இத்திட்டமும் பலிக்காமல் முறியடிக்கப்பட்டது. ''மாலிக் இப்னு ஸலத்'' என்ற யூத மதகுரு மூஸாநபி முதற் கொண்டு மனிதர்களில் யாருக்கும் இறைவன் வேதத்தை அருளவில்லையெனப் பிதற்றிக் கொண்டிருந்தார். யூதர்கள் பெருமானர் (ஸல்) அவர்களிடம் நபிமார்கள் அனைவரும் ஜெரூஸலத்தில் தான் வசித்து வந்தார்கள்



நீங்களும் அங்கு சென்று வசிக்கலாமே என்று தேனொழுகப் பேசுவார்கள். பெருமானாரும் அன்பானவார்த்தைகளைப் பேசி தட்டிக் கழித்து விடுவார்கள்.

இதன்பின் யூதர்களின் வெஞ்சினமும் குரோதமும் அதிகரித்தது. பெருமானாரிடம் செய்து கொண்ட உடன்படிக்கையை தங்களுடைய செயல்களால் செயல் இழக்கச் செய்து கொண்டு வந்தார்கள். யூதர்கள் வழியில் பெருமானாரைச் சந்தித்ததால் ஸலாம் உரைப்பதற்குப் பதிலாக அஸ்ஸாமு அலைக்கும் உங்கள் மீது மரணம் உண்டாவதாக என்பார்கள். பெருமானார் (ஸல்) அவர்களிடம் உரையாடும் போது பேச்சின் இடை இடையே ராஇனா உங்களுக்குக் கட்டுப்பட்டோம் என்பதற்கு பதிலாக ரஇனா என்று கூறி கண்சிமிட்டி நமட்டுச் சிரிப்பு சிரிப்பார்கள். இதன் பொருள் மடையன் என்பதாகும். யூதர்களின் இவ்வழக்கத்தை மேற்கொண்ட ஐரோப்பிய சரித்திர ஆசிரியர்கள் முஹம்மது என்பதற்கு பதிலாக “மஹாவுண்ட்” என்று எழுதினார்கள் இதன் பொருள் பூச்சாண்டி என்பதாகும்.

ஒருமுறை பெருமானார் யூதர்களிடம் அவர்களின் வீட்டு முற்றத்தில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருக்கம் போது ஒரு யூதன் வீட்டின் மாடிக்குச் சென்று பெருமானார் அவர்கள் மீது பெருங்கல்லைப் போட்டு கொலை செய்ய முயற்ச்சித்தான். இதனை விளங்கிக் கொண்ட நபியவர்கள் அவ்விடத்தை விட்டும் நகர்ந்துவிட்டார்கள். கைபர் போருக்குப் பின் யூதப்பெண்ணொருத்தி அறிளித விருந்தில் விஷம் கலந்திருப்பதைக் கண்ட பெருமானாரவர்கள் உணவைத்துப்பி விட்டார்கள். ஆனால் ஒரு தோழர் உணவை உட்கொண்டுவிட்டதால் இறைவனடி சென்று விட்டார்கள்.

அனுதினமும் பஜ்ருத் தொழுகைக்குப்பின் பெருமானார் தெருவில் செல்லும் போது யூதக்கிழவி தனது மாடியிலிருந்து பெருமானாரவர்கள் மீது குப்பைகளைக் கொட்டும் வழக்கத்திலிருந்தாள். ஒருநாள் அவள் குப்பை கொட்டவில்லை. கிழவி நோயுற்று விட்டாள் என்பதை அறிந்த பெருமானாரவர்கள் அவளின் இல்லம் சென்று அவளை நோய்விசாரித்தார்கள்.

பெருமானாரவர்களிடம் கூட்டு ஒப்பந்தம் செய்திருந்தும் பத்ருப்போரில் யூதர்கள் கலந்து கொள்ளவில்லை மறுத்துவிட்டார்கள். உஹதுப் போரில் இஸ்லாமியப் படைகளுடன் சென்ற 300 யூதர்களும் இடையில் பின்வாங்கி மதீனா வந்துவிட்டார்கள். அகழி போரின் போதும் யூதர்கள் எதிரிகளின் பக்கம் சேர்ந்து கொண்டு பெருமானார் (ஸல்) அவர்களுக்கு துரோகமிழைத்தார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்களின் சிறுபிராயத்தில் அபூதாலிப் அவர்களுடன் வியாபாரத்திற்காக சிரியா செல்லும் வழியில்புஸ்ரா என்ற

இடத்தில் புஹைறா என்ற கிறிஸ்தவ மதகுருவைச் சந்தித்தார்கள். அப்போது அவர் அபூதாலிப் அவர்களிடம் இச்சிறுவருக்கு யூதர்களால் ஆபத்து வரும் பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்று எச்சரித்தார். பெருமானார் (ஸல்) 24ம் வயதில் மீண்டும் வியாபார நிமித்தமாக சிரியா சென்றபோது புஸ்ரா என்னும் இடத்தில் மரத்தடியில் தங்கியபோது மரம் துளிர்விட ஆரம்பித்தது. இதை மடத்திலிருந்து பார்த்து கொண்டிருந்த கிறிஸ்தவத் துறவி வேகமாக வெளியே வந்து இம்மரத்தடியில் தங்குபவர் நிச்சயமாக நபியாகத்தான் இருப்பார் இவரை யூதர்களிடமிருந்து பாதுகாக்க வேண்டும் என பெருமானாரவர்களுடன் சென்ற மைஸரா என்ற ஊழியரிடம் கூறினார். புஸ்ரா என்ற இடம் இன்றும் "பாஸ்ட்ரா" என்ற பெயரில் வழங்கிவருகின்றது.

## புனித உடலைக் களவாட சதிசெய்த ஐரோப்பியர்கள்

செல்ஜூக் அரசர் சுல்த்தான் மலிக்ஷாவின் தளபதிகளில் ஒருவரான "அக்ஸ் நகர்" என்பவரின் மகனாவார். இமாதுத்தீன் ஸங்கீ. இராக்கில் "தைக்ரீஸ்" நதிக்கரையில் அமைந்திருந்த மூஸல் நகரைத் தலைநகராகக் கொண்டு தமது தந்தைக்குப்பின் பதினான்காம் வயதினிலேயே ஆட்சியில் அமர்ந்தார். இவர் கி.பி. 1127ல் பொறுப்பேற்ற காலம் சிலுவைப் போரின் காலமாக இருந்தது. 1096 ல் முதல்சிலுவைப்போர் துவங்கியது. இதில் பிரான்ஸ் இத்தாலிநாட்டு இளவரசர்கள் உட்பட ஏழுலட்சம் கிறிஸ்தவப்படைகள் அணிதிரண்டு வந்திருந்தனர். இப்படையினர் ரூஹா–அன்தாக்கியா–ஜெருசலம் ஆகிய பகுதிகளை வென்று மூன்று சிற்றரசுகளை நிறுவி இருந்தார்கள். இமாதுத்தீன் ஸங்கி இருபது ஆண்டுகாலமாகப் போராடி சிலுவைப்போர்படைகளைத் திக்குமுக்காடச் செய்திருந்தார். இந்நிலையில் ஜாபிர்கோட்டையை இமாதுத்தீன் முற்றுகையிட்டுக் கொண்டிருக்கும்போது சிலுவைப் படையினருக்கு விலைபோன இமாதுத்தீன் ஸங்கியின் பாதுகாவலனே அவரைக் கொலைசெய்துவிட்டான். 60 வயதைக் கடந்த இமாதுத்தீன் கி.பி. 1146 ஹிஜ்ரி 541 ரபீஉல் அவ்வல் பிறை 5 ல் இறைவனடி சேர்ந்தார்கள். இவருக்கு நூருத்தீன்–ஸைஃபுத்தீன் என இரு ஆண்மக்கள் இருந்தார்கள். இவரின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளை இரண்டாகப் பிரித்து இரு ஆண்மக்களுக்கும் வழங்கப்பட்டது.

அலப் போ நகரைத் தலைநகராக கொண்டு தனது ஆட்சியைத்துவக்கி நூருத்தீன் ஸங்கீ நீதி நெறியாளராக இருந்தார். ஒன்பது லட்சம் கிறிஸ்தவப் படைகளைக் கொண்ட இரண்டாம் சிலுவைப் போர் கி.பி. 1147 ல் துவங்கியது இப்போரில் மாவீரர் நூருத்தீன் ஸங்கி சிலுவை வீரர்களை விரட்டி அடித்து டமாஸ்கஸ்– ரூஹா ஆகியபகுதிகளைக்



கைப்பற்றினார். விரண்டோடிய கிறிஸ்தவர்கள் பிரான்ஸ் மன்னர் ஏழாம் லூயி, ஜெர்மன் அரர் கான்றாட், இருவரின் தலைமையின் கீழ் இத்தாலி, பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்த்திரியா, இங்கிலாந்து போன்ற நாடுகளிலிருந்து படை திரண்டு வந்து மன்னர் நூருத்தீன் ஸங்கீயை எதிர்த்தார்கள்.

சிலுவைப் போர் வீரர் அனைவரையும் புறமுதுகிட்டு ஓடச் செய்து இரண்டாம் கோஸிலினையும் ஆண்டியோக்கியாவின்மன்னர் மூன்றாம் பெஹ்மண்டையும், திரிப்ோலிமன்னர் மூன்றாம் ரைமண்டையும் சிறைபிடித்தார் மன்னர் நூருத்தீன் பெயரைக் கேட்டர்லே சிலுவை வீரர்கள் கதிகலங்கிவிடுவார்கள். இவரின் வீரத்தைஉலகெங்கும் பெருமையாகப் பேசப்பட்டுவந்தது. எகிப்து, ஸிரியா, எமன் ஆகிய பகுதிகளில் இவரின் ஆட்சிபரந்து நிலவியது.

ஒரு நாள இரவு மன்னர் வழக்கம் போல் நள்ளிரவுத் தொழுகையைத் தொழுதுவிட்டு உறங்கிக் கொண்டிருக்கும்போது மன்னரின் கனவில் பெருமானார் (ஸல்) காட்சி வழங்கி யூதர்கள் இருவரைச் சுட்டிக்காட்டி "நீர் இவர்களின் விஷமத்தை அகற்றுவீராக" எனக் கூறி மறைந்தார்கள். அன்றிரவு இவ்வாறு மும்முறை கனவு கண்டார்கள். விழித்தெழுந்த மன்னர் தமது அமைச்சர் ஜமாலுத்தீன் அவர்களுடன் இருபது வீரர்களையும் அழைத்துக் கொண்டு ஏராளமான பரிசுப் பொருட்களுடன் மதீனா சென்றடைந்தார்கள்.

பெருமானாரின் புனித ரவ்ளாஷரீபுக்குள் நுழைந்த மன்னர் பக்தியுடன் ஸலாமுரைத்துப்பின் மஸ்ஜித் நபவிய்யில் அமர்ந்து எல்லோருக்கும் பரிசில் வழங்கப்படும் எல்லோரும் வந்து வாங்கிச் செல்ல வேண்டும் என்று பறை அறிவித்தார். மதீனாநகர மக்கள் அனைவரும் மன்னரிடம் பரிசில் பெற்றுச் சென்றனர். பரிசில் வாங்க வந்த அனைவரின் முகங்களையும் உற்றுப் பார்த்த மன்னரவர்கள் பெருமானார் (ஸல்) சுட்டிக்காட்டிய இருவரின் முகங்களையும் காணாமல் பரிசில் வாங்க வந்தகடைசி நபரிடம் இன்னும் யாரேனும் பரிசு வாங்காதவர் உண்டா? என்றார்கள்.

ஆம் வசதிபடைத்த இரு பக்திமான்கள் வரவில்லை எனப்பதிலுரைத்தார். உடனே மன்னர் அவ்விருவரையும் வரவழைத்துப் பார்த்த போது பெருமானார் (ஸல்) அவர்கள் சுட்டிக்காட்டிய பூனைக் கண்களுடைய யூதர்களாக அவ்விருவரையும் பார்த்த மன்னர் அதிர்ச்சியடைந்து அவ்விருவரையும் விசாரித்தார். அவர்கள் நாங்கள் ஸ்பெயின் நாட்டு முஸ்லிம்கள் ஹஜ்ஜுக்கடமைகளை முடித்துவிட்டு பெருமானார் (ஸல்) அவர்களின் தரிசம் பெறுவதற்காகக் காத்து இருக்கின்றோம். மஸ்ஜித் நபவிய்யின் தென்புறமுள்ள "ருபாத்தே அஜமி" என்ற விடுதியில் தங்கியுள்ளோம் என்றார்கள். பள்ளியிலேயே அவர்களை விட்டு விட்டு

மன்னர் அவர்கள் தங்கியிருந்த அறையைப்பார்வை யிட்டபோது அறையில் ஓர்விரிப்பு மட்டும் விரிக்கப்பட்டிருந்தது. அவ்விரிப்பை நீக்கியபோது சுரங்கம் தோண்டப்பட்டிருப்பது தெரிந்தது. அது பெருமானார் (ஸல்) கப்ரை நெருங்கிவிட்டதும் தெரியவந்தது கண்டு அதிர்ந்த மன்னர் யூதர்கள் இருவரையும் நையப்புடைத்த போது நாங்கள் ஸ்பெயின் நாட்டவர்கள் எங்கள் மன்னரின் ஆணையின்படி நாங்கள் முஹம்மது நபியின் உடலைக் களவாடிச் செல்லவந்தோம் எனப்பதிலுரைத்தார்கள்.

அவ்விருவரின் திட்டத்தைக் கேட்ட மன்னர் தேம்பித் தேம்பி அழலானார்கள். பின் அவ்விருவரையும் சிரச்சேதம் செய்யப் பணித்துவிட்டு. பெருமானார் (ஸல்), அபூபக்கர் (ரலி) உமர் (ரலி) மூவரின் கப்ருகளைச் சுற்றிலும் நீர்மட்டத்திலிருந்து தரைமட்டம்வரை ஈயத்தால் சுவர் எழுப்பிவிட்டு நிம்மதியாக அலப்போ சென்று கி.பி. 1174ல் டமாஸ்கஸில் இறைவனடி சேர்ந்து அங்கேயே நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். உமைய்யா கலிபாக்களில் இரண்டாம் உமர் என்று அழைக்கப்பட்ட உமர் இப்னு அப்துல் அஜீஸ் அவர்களுக்குப்பின் இவரைவிட நீதி நெறிதவறாத மன்னரை நான் கண்டதில்லை என வரலாற்று ஆசிரியர் இப்னு அல் அதீர் குறிப்பிடுகின்றார்கள்.

ஒருமுறை அறுபது பேர் கொண்ட குழு ஒன்று ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி) ஹஜ்ரத் உமர் (ரலி) இருவரின் சடலங்களையும் தோண்டியெடுத்து ஜன்னத்துல் பகீ கப்ருஸ்தானில் அடக்கிவிடவேண்டும் என்ற முடிவோடு பாபுஸ்ஸலாம் வாயில் வழியாக நடந்து வந்தபோது உதுமான் (ரலி) மிம்பருக்கும்–பெருமானார் (ஸல்) அவர்களின் மிம்பருக்குமிடையே பின்புறமுள்ள பூமிபிளந்து அவ்வறுபது பேரையும் பூமி தன்னுள் சொருகிவிட்டது. இன்றும் அவ்விடம் கருப்புச்சலவைக் கற்களால் சதுரவடிவில் அடையாளமிடப்பட்டுள்ளது.

## மாநபியின் கப்ரைச் சிதைக்க முயற்சித்த கயவன்

கரக்பிரதேச மன்னனான அர்னால்டு இஸ்லாமியர்களுக்கு இழைத்த கொடுமைகள் கொஞ்ச நஞ்சமல்ல. ஆயிரக்கணக்கான முஸ்லிம்களைக் கொன்று குவித்தான். பெண்களை மானபங்கப்படுத்தினான் மஸ்ஜிதுகளையும், நூலகங்களையும், திருக்குர் ஆனையும் தீக்கிரையாக்கினான். ஹஜ்ஜுக்குச் சென்ற பயணிகளை வழிமறித்துக் கொள்ளையடித்தபின் உங்கள் நபிவந்து உங்களைக் காப்பாற்றட்டும் எனக் கொக்கரித்துக் கொலைசெய்தான்.

“நான் மக்காவையும், மதீனாவைக் கைப்பற்றி முஹம்மது நபியின் அடக்கவிடத்தைத் தகர்த்து அவரின் எழும்புகளை ஜெருஸலம்



கொண்டு வருவேன் எனச் சூளுரைத்தான்”. இவ்வாறு இவன் பிரகடனப் படுத்தியதோடல்லாமல் கப்பற்படையையும் கொண்டு சென்றான் இவனின் செய்தியறிந்த மன்னர் ஸலாஹுத்தீன் ஐய்யூபி அவர்கள் லூலூ என்ற கப்பற்படைத்தலைவரை இவனை எதிர்க்க அனுப்பினார். லூலூ அர்னால்டை செங்கடலில் சந்தித்துப் போரிட்டார். தோல்வியுற்ற அர்னால்டு தமது படைகளுடன் தப்பிவிட்டான். அப்போது மன்னர் ஸலாஹுத்தீன் அர்னால்டை எனது கரங்களாலேயே கொல்வேன் என சபதமேற்கொண்டு அவனை அழிக்க தமது படைகளுடன் சென்றார்.

இச்செய்தியறிந்த ஜெரூஸலச் சக்கரவர்த்தி கைடி லூஸினான், திரிப்போலி மன்னன் ரேமாண்ட் போன்ற கிறிஸ்தவச்சிற்றரசர்களும் ஒன்று சேர்ந்து “ஷத்தீன்” என்ற இடத்தில் கி.பி. 3.7.1187 வெள்ளிக் கிழமையன்று இஸ்லாமியப் படைகளுடன் போரிட்டார்கள். இரண்டு நாட்கள் நடந்த இப்போரில் கிறிஸ்தவப்படைகள் சின்னாபின்னப்பட்டு அழிந்ததோடு மன்னர்களும் சிறைபிடிக்கப்பட்டார்கள். சிறை பிடிக்கப்பட்ட மன்னர்களில் அர்னால்டை மட்டும் சுல்தான் ஸலாஹுத்தீன் தமது கரங்களால் வெட்டி விழ்த்தினார்கள்.

கி.பி. 1187 செப்டம்பர் 20 ம் நாள் சுல்தான் ஸலாஹுத்தீன் ஜெருஸலத்தை முற்றுகையிட்டார்கள். 25 நாட்கள் கழித்து சிலுவைப் படையினர் சரண் அடைந்தார்கள். அன்றைய நாள் கி.பி. 1187 அக்டோபர் 16 ம் நாள் ஹிஜ்ரி 583 ரஜபுபிறை 27 மிஃறாஜ்தினமாக இருந்தது. ஜெருஸலத்தை சுல்த்தான் வெற்றிகொண்ட செய்தியறிந்த போப் பாண்டவர் வெகுண்டு “பாவமன்னிப்பளிக்கும் இப்புனிதப் போரில் பங்கு பெறாதவர்களை மதப்பிரஷ்டம் செய்யப்படும்” என அறிக்கை வெளியிட்டார்.

போப்பின் பிரகடனத்தால் கிறிஸ்தவ உலகம் கவசம் தரித்து மூன்றாம் சிலுவைப் போருக்கு ஆறுலட்சம் வீரர்கள் அணிதிரண்டனர். ஜெர்மன் சக்கரவர்த்தியும் இங்கிலாந்து அரசர் ரிச்சர்ட்டும், பிரான்ஸ் மன்னர் பிலிப்பும் தலைமையேற்க ஸிஸிலி, ஆஸ்த்திரியாவைச் சேர்ந்த சிற்றரசர்களும் உடன் சென்றார்கள். பலஸ்தீனப் பகுதியில் பல இடங்களில் தோல்வியைத் தழுவிய இவர்கள் 5 லட்சம் படைவீரர்களை இழந்தார்கள். சுல்த்தான் ஸலாஹுத்தீன் அவர்களிடம் கி.பி. 1192 செப்டம்பர் 2 ம் நாள் மூன்று ஆண்டு எட்டு மாதம் போர் நிறுத்தம் ஒப்பந்தம் செய்துவிட்டு மீதமுள்ள மன்னர்களும் மீதமுள்ள ஒரு லட்சம் படையினரும் தாய்நாடு வந்து சேர்ந்தார்கள்.

இஸ்லாத்தையும், இஸ்லாமியர்களையும், இழித்துரைத்தவன் சோனிலிஸ்டன். இவனுக்கும் முஹம்மது அலிகிளேவுக்கும் 1964 FEB 25ம் நாள் நடக்கும் குத்துச்சண்டையை அமெரிக்கப்பத்திரிக்கைகள்

இஸ்லாத்திற்கும் கிறிஸ்தவத்திற்கும் இடையே நடக்கும் சிலுவைப்போர் என வர்ணித்தன இச்சண்டையில் முஹம்மது அலி கிளே வெற்றி பெற்றார். சிலுவைப்போர் தோல்வியில் முடிந்தது.

## இணையதளம், எழுத்து மூலம் இஸ்லாத்திற்கு எதிரான சதிகள்

அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் கல்வித்துறை பேராசிரியர் டாக்டர் ஸைய்யிது மர்இ என்பவர் ஆய்வறிக்கை வெளியிட்டுள்ளார். அதில் 1980 லிருந்து இஸ்லாத்தை இழிவுபடுத்தும் இணைய தளங்கள் வந்துவிட்டன. அதற்குப் பின்னணியில் யூத குழுக்கள் உள்ளன. இவ்வாறான இணைய தளங்கள் அவர்களிடம் பத்தாயிரம் வரைஉள்ளன. இஸ்லாமிய விரோத தளங்கள் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. இறை தூதுரையும், இனிய தோழர்களையும் தரம்தாழ்ந்த முறையில் இழிவுபடுத்துவது. அரபி லிபியில் உள்ள எழுத்துக்களை பன்றி, நாய் உருவங்களில் காலியோகிராபி செய்யப்பட்டிருப்பது. சில இனைய தளங்களில் திருக்குர்ஆனில் இல்லாத அத்தியாயங்களைக் கூட இணைத்துள்ளார்கள்.

இஸ்லாத்தின் மீதும், முஸ்லிம்களின் மீதும் தீவிரவாதச் சேற்றைவாரித் தூற்றும் வலைகளும் ஏராளமாக உள்ளன. நிர்வாணமான பெண்களுடன் திருக்குர்ஆன் வசனங்களை இணைக்கும் கயவர்களும் உள்ளனர். புகழ்பெற்ற கலைஞர்களின் உடைகளிலும் சில நேரங்களில் குர்ஆன் வசனங்கள் இலைமறைகாயாகத் தெரியும். இது ஒரு மனோரீதியிலான தாக்குதலாகும். இந்த ரீதியில் தான் குவாண்டனமோ–பே–சிறைச் சாலைகளில் திருக்குர்ஆன் இழிபடுத்தப்பட்டதும் அடங்கும்.

இவ்வாறான 10,000 க்கும் அதிகமான இணையதளங்களுக்கு வருடம் தோறும் பத்துபில்லியன் டாலர்கள் செலவளிக்கப்படுகின்றன, ஆனால் அதேசமயம் நம்மிடமுள்ள இணையதளங்கள் 200 க்கும் குறைவாகவே உள்ளன என்கிறார் டாக்டர் சையித்மர்இ.

பிரிட்டனின் கிளாஸ்க்கோ பல்கலைக்கழகம் மீடியாக் குழு நூல்ஒன்று வெளியிட்டுள்ளது. அந்நூலில் "இஸ்ரேல் பலஸ்தீனப்பிரச்சனைகளில் பிரிட்டனிலுள்ள முக்கியமான தொலைக்காட்சிகள் அனைத்தும் உண்மைக்குமாறான தகவல்களையே வெளியிடுகின்றன. போராட்டத்திற்கு அடிப்படைக் காரணம் என்ன என்பதை இந்தச் சேனல்கள் ஒரு போதும் வெளிப்படுத்துவதேஇல்லை. இந்தச் சேணல்கள் இஸ்ரேல் அரசின் பிரச்சாரத்துறை தயாரிக்கும் நிகழ்ச்சிகளை செய்தி எனும் பெயரில் அப்படியே ஒளிபரப்புகின்றன என்று அந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. "இஸ்ரேலின் கெட்ட செய்தி" என்றே அந்நூலுக்குப் பெயர்வைத்துள்ளது கிளாஸ்கோ பல்கலைக்கழகம்.



சிலுவைப்போருக்குப் பின் இஸ்லாமியர்களை நேரிடையாக அழித்தொழிக்க முடியாது என்பதைக் கண்டு கொண்ட மேற்கத்திய ஏகாதிபத்தியங்கள் இஸ்லாமியர்களை எழுத்துமூலமாக சதிசெய்து அழித்திட முனைந்து வருகின்றனர் வந்து கொண்டுமிருக்கின்றனர். அமெரிக்கா, பிரிட்டன், இஸ்ரேல் இம்மூன்றும் இன்றைய உலகில் தங்களின் ஆதிக்கத்தை நிலைநாட்டிட பணபலம், படைபலம், அறிவு பலம் இம்மூன்றைப் பயன்படுத்தியும் நினைத்ததைச் சாதிக்க முடியாததால் இன்று உலகின் தலைசிறந்த எழுத்தாளர்களுக்கும். ஊடகங்களுக்கும் கோடிக்கணக்கில் பணத்தைக் கொடுத்து பத்திரிக்கைத் துறையையும், ஊடகத்துறையையும் இஸ்லாத்திற்கு எதிராகத் திருப்பி விட்டுள்ளார்கள். பத்திரிக்கை, தொலைக்காட்சி மீடியாக்கள் அனைத்தும் இஸ்லாத்தையும், இறைத்தூதரையும், இஸ்லாமியர்களையும் இழிவு படுத்தும் செயல்களில் இறங்கியுள்ளன.

இவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் உடலைக்களவாட நினைத்தார்கள் மரண தண்டனை பெற்றார்கள் கப்ரைத் தோண்டி இழிவுபடுத்த நினைத்தார்கள் சிரச்சேதமடைந்தார்க்ள. இதற்குப்பின் பெருமானார் (ஸல்) அவர்களை எழுத்துமூலம் தொடர்ந்து இழிவு படுத்திக்கொண்டே வருகின்றார்கள்.

பத்திரிக்கைத்துறையை தன்வயப் படுத்துவதற்காக உலகிலுள்ள எல்லா முன்னணி பத்ரிக்கையைச் சேர்ந்த எழுத்தாளர்களை அமெரிக்கா தன் நாட்டிற்கு தனது செலவிலேயே அழைத்து அழகிய உபசரணைகளும், சுற்றுலாக்களையும் அளித்து இஸ்லாத்தை, முஸ்லிம்களைத் தீவிரவாதிகளாகவும் இஸ்லாத்தைத் தீவிரமான கொள்ளையுடையதாகவும் எவ்வாறு உலகிற்குக் காட்டிடவேண்டும் என்ற பயிற்சிகளும் தரப்பட்டுள்ளன. இதில் வேதனை என்னவென்றால் முஸ்லிம்களில் ஒரு அணியினரையே தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளதும் அவர்களும் பயன்படுவதும் தான் மிகவேதனையான விஷயமாகும்.

இன்று மீடியா உலகம் இஸ்லாமியர்களுக்குச் சாதகமாக இல்லாததால் யூதர்களும், ஐரோப்பியர்களும் மீடியாவைத் தங்கள் இஷ்டப்படியெல்லாம் வளைக்கின்றார்கள். இஸ்லாத்தையும் இறுதி நபியையும், திருக்குர்ஆனையும், முஸ்லிம்களையும் இழித்துரைப்பதில் முன்னணி வகிப்பவர்கள் ஐரோப்பியர்கள்தாம்.

பிரிட்டனில் உள்ள யூத எழுத்தாளனான "ஹெசுபின்–ஹஃஸ்பின் நகீம்" என்பவன் "டர்க்கிஸ் ஆர்ட் ஆப்லவ்" துருக்கிய காதற்கலை எனும் பெயரில் பெருமானார் (ஸல்) அவர்களைப்பற்றி முஸ்லிம்கள் கொதித்

தெழும்வகையில் நூல் வெளியிட்டுள்ளான். இந்நூல் பாக்கிஸ்தான் மாணவர்களின் பார்வையில் பட கொதித்தெழுந்த அம்மாணவர்கள், பிரிட்டிஷ் அரசு அலுவலகங்கள் முன் ஆர்ப்பாட்டம் செய்துள்ளார்கள். பாக்கிஸ்தானில் ராவல் பிண்டி–லாஹூர்– லாயில்பூர் நகரங்களில் கொதித் தெழுந்த கல்லூரி மாணவர்கள் மிக வன்மையான கண்டனக் கணைகளைத் தொடுத்திருக்கின்றார்கள். பாக்கிஸ்தான் முஸ்லிம்களின் மன உணர்வுகளைப் புரிந்து கொண்ட அன்றைய பிரதமர் ஹீத் அவர்கள் தமது நாட்டில் இப்படியொரு நூல் வந்திருப்பது குறித்து மன வருத்தத்தைத் தெரிவித்துள்ளார்கள். செய்தி– ரஹ்மத் மாத இதழ், 1971–மார்ச்.

## அனாச்சாரத்திற்குப் பெயர் பெற்ற டென்மார்க்!

வடமேற்கு ஐரோப்பாவில் ஜெர்மனிக்கு அடுத்து இருக்கும் டென்மார்க் நாட்டின் தலைநகரம் "கோபன் ஹேகன்" பழைய டேனிஷ் நாடான இந்நாட்டில் அனைத்து வகையான சுதந்திரமும் தாராளமயமாக்கப்பட்டுள்ளது. அந்நாட்டில் 90 சதவீதம் பேர் கிறிஸ்தவ புராட்டஸ்டண்டுகள் ஆவார்கள் இந்நாட்டின் மக்கள் தொகையில் 14 சதவீதத்தினர் இஸ்லாமியர் ஆவார்கள்.

இக்கிறிஸ்தவ மக்களிடம் பண்பாட்டுச் சுதந்திரம் எடுபட்டுப் போய் பல ஆண்டுகள் கடந்துவிட்டன. டென்மார்க் பல்கலைக்கழக மனோதத்துவ நிபுணர் "பிரின்கேட்" என்பவர் டென்மார்க்கின் நடனங்களும், ஒளிவு மறைவின்றி காட்டப்படும் ஆண், பெண் சேர்க்கைக் காட்சிகள், அதற்காக ஒட்டப்படும் நிர்வாணச் சுவரொட்டிகள் அனைத்தும் கேடுவிளைவிக்கும் ஒன்றல்ல நன்மைதரும் நல்ல காரியம் என்று 1970 களில் அடித்துக் கூறினார். "பால்–போ–லாஸ்கி" என்ற பொறி இயலாளர் எந்த ஆணும் தனக்கென்று ஒரு மனைவி வைத்துக் கொள்ளக் கூடாது.

ஐந்து ஆண்கள் சேர்ந்து ஒரு பெண்ணை மனைவியாக வைத்துக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்வதால் ஆண்கள் எத்தனை பேர் இருந்தாலும் பெண் ஒருத்தியாக இருப்பதால் வருடத்திற்கு ஒரு பிள்ளைதானே பெறுவாள் என்ற அபூர்வக்கண்டு பிடிப்பைக் கூறினார். இவரின் இக்கண்டு பிடிப்பு பத்திரிக்கைகளில் வெளியானவுடன் பல பெண்கள் இவருக்குக் கடிதம் எழுதினார்கள். அதில் உங்கள் அருமையான ஆலோசனைகளை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் எங்களை மணம் முடித்துக் கொள்ளும் அத்தனை ஆண்களும் தனித்தனியாக எங்களுக்கு செலவிற்குப் பணம் கொடுத்துவிட வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார்களாம்.

1990ல் உலகில் எந்தநாடும் செய்யத் துணியாத காரியமான ஒரினத்



திருமணத்திற்கு டென்மார்க் அரசு சட்டமியற்றி அனுமதித்தது. வானவர்கோன் ஜிப்ரயீல் (அலை) அவர்களை எல்லா யூதர்களும் எதிரியாகக் கொண்டுள்ளார்கள். காரணம் ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டிருந்த "ஸதூம்" மக்களின் ஐந்து நகரங்களை அல்லாஹ்வின் கட்டளைப்படி அந்தரத்தில் தூக்கி அப்படியே தலைகீழாக அடித்து அழித் தொழித்தார்கள். இன்றும் அந்த ஐந்து நகரங்களும் சாக்கடலுக்கடியில் அமிழ்ந்துள்ளது. ஜிப்ரயீல் (அலை) இவ்வாறு செய்ததால் யூதர்கள் வானவர்கோனை எதிரியாகக் கொண்டுள்ளார்கள்.

இத்தகைய ஹோமோ செக்ஸியர்களின் பத்திரிக்கை தான் "ஜீலான்ஸ்–போஸ்ட்டன்" எனும் நாளிதழ். இவ்விதழின் சிறுவர் மலரில் நபி பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்களை இழிவு படுத்தும் நோக்கில் 12 கார்ட்டூன்களை2005 செப்டம்பர் 30 ல் வெளியிட்டது. உலகமுஸ்லிம்களின் கண்டனங்களால் இப்பத்திரிக்கையின் ஆசிரியர் கார்ட்ஸன் ஜெஸ்டே என்பவர் மன்னிப்புக் கேட்டதால் பிரச்சனை சற்று அடங்கியது. இப்பிரச்சனை திட்டமிட்ட சதியாக இருந்ததால் 2006 ஜனவரி, பிப்ரவரிகளில் ஐரோப்பாவின் பத்து நாட்டுப் பத்திரிக்கைகள் மீண்டும் அதே கார்ட்டூன்களை மறுபிரசுரம் செய்தன. இதனால் இஸ்லாமிய உலகம் கொந்தளித்தது. அதற்கு மேற்கத்திய ஏகாதிபத்தியங்கள் சொன்ன ஒரே பதில் கருத்துச் சுதந்திரம் என்பதாகும்.

முஸ்லிம்களை இழிவு படுத்தி திரைப்படம் தயாரித்த டென்மார்க் படத்தயாரிப்பாளர் "தியோ–வான் கோஹ்" என்பவரை மனஉளைச்சலுக்குள்ளான ஒரு முஸ்லிம் 2004 ல் கொலை செய்துவிட்டார்.

"உலகில் ஒரு பெரும்பான்மை மக்களால் தங்களின் வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டுள்ள ஒருவரை கேலி சித்திரத்தில் வடிப்பது கருத்துச் சுதந்திரத்திலோ, பேச்சுச் சுதந்திரத்திலோ வராது" என்று "அம்னஸ்டி இண்டர் நேஷனல்" என்ற உலக மனித உரிமைகள் என்ற அமைப்பு கூறியது. ஐநாவின் பொதுச் செயலாளர் கோபி அன்னான் அவர்களும் இதைக்கண்டித்துள்ளார்கள்.

## சுவனத்தின் இரண்டு மலர்கள்

கல்கத்தாவில் உள்ள அலிபூர் கபுருஸ்தானில் நுழைந்தவுடன் நமது கண்ணில் படுவது ஓர் எடுப்பான சமாதி. அந்தச் சமாதியில் இப்படி ஒரு உருது கவிதையை நம்மால் படிக்க முடியும். "ஜன்னத் கா தோ பூல் சோ ரஹ் ... ஹை" அதாவது சுவர்க்கத்தின் இரண்டு மலர்கள் இங்கே அமைதியாகத் தூங்குகின்றன.

அந்த இரண்டு மலர்கள் யார் தெரியுமா? 1924 ல் ராமகிருஷ்ணா

மடத்தைச் சார்ந்த சுவாமி சிரத்தானந்தர் என்பவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றிய அவதூறாக "ரங்கேலா ரசூல்" என்ற நூலை எழுதினார். இவர் கல்கத்தா நகரில் உள்ள ஒரு பிரதான சாலையில் புத்தகக்கடை ஒன்றை நடத்திவந்தார்.

"ரங்கேலா ரசூல்" என்றால் ஸ்த்திரீ லோலன் (நவூது பில்லாஹ்) என்று அர்த்தம். இந்த நூல் வெளியானதும் இந்தியா உள்பட பல நாடுகளில் உள்ள முஸ்லிம்கள் தங்களது கடும் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

அப்போது தாதாபாய் நவ்ரோஜி என்பவர் காங்கிரஸ் தலைவராக இருந்தார். காயிதே ஆஜம் பாபா முஹம்மது அலி ஜின்னா அவர்கள் காங்கிரஸ் மகா இயக்கத்தில் பிரபலம் அடைந்து வரும் சமயம். அவர் அப்போது பம்பாயில் குடியிருந்து கொண்டு தமது வழக்கறிஞர் தொழிலை நடத்திக் கொண்டுவந்தார்.

இந்தச் சூழ்நிலையில் கொதித்தெழுந்த முஸ்லிம்களால் தமக்கு எந்த நேரத்திலும் ஆபத்து வந்துவிடலாம் என சுவாமி சிரத்தானந்தர் எந்நேரமும் போலீஸ் பாதுகாப்புடன் இருந்தார்.

நாட்டில் உள்ள நடுநிலையான பல தலைவர்களும்–பத்திரிகைகளும் இவரைக்கண்டித்து அறிக்கைகள் விட்டுக் கொண்டிருந்தார்கள். ஆபாசமும், துவேஷமும் நிறைந்த அந்த நூலை வாபஸ் வாங்கும்படியும், பகிரங்க மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும் பலர் வற்புறுத்தினர்.

எதற்கும் மசியாத ஹிந்துமத துவேஷியான இவர் மண்டைக் கர்வம் கொண்டு அத்தனை சவால்களையும் எதிர்த்து நின்றார்.

அவரைத் தீர்த்துக் கட்ட லாகூரிலிருந்து அப்துல் ரஷீத்–அப்துல் அஜீஸ் என்ற இரண்டு இளைஞர்கள் கல்கத்தா பயணமானார்கள்.

இரண்டு வாலிபர்களும் லாகூரில் உள்ள ஒரு பெரிய ஆலிம் அவர்களிடம் தங்களது முடிவைச் சொல்லி நாங்கள் இருவரும் தண்டனை மூலம் தூக்கிலிடப்பட்டால் எங்களுக்கு சொர்க்கம் கிடைக்குமா? என்று கேட்டிருக்கிறார்கள்.

"நிச்சயம் உங்களது செயலால் சுவனபதியில் உங்களிருவருக்கும் மேலாம்பரமான பதவியை அல்லாஹ் தருவான்" என்று அந்த ஆலிம் பெருமகனார் சொன்னாராம்.

அவ்வளவுதான் கல்கத்தா வந்து இறங்கிய இரண்டு இளைஞர்களும் மாறு வேடத்தில் சுவாமி சிரத்தானந்தர் கடையின் பிளாட்பாரத்தில் பிச்சைக்காரர்கள் போன்று பல மாதங்கள் கிடந்தனர்.

இவர்களைப் பார்த்த சுவாமி சிரத்தானந்தருக்கு இவர்கள் மீது எந்தவிதமான சந்தேகமோ–சலனமோ ஏற்படவில்லை.



இருவரும் வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். ஒரு மதியம் வேளையில் போலீஸ் பாதுகாப்பு தளர்ந்தது. நல்ல சமயம் என்று இருவரும் கடைக்குள் புகுந்தனர். இருவர்களிடமிருந்த கைத்துப்பாக்கியால் அவரை சரமாரியாகச் சுட்டனர்.

ஸ்தலத்திலேயே ரத்த வெள்ளத்தில் மிதந்து பிணமானார் சுவாமி. இருவரும் நேராக போலீஸ் ஸ்டேஷன் சென்று தங்களது செய்கையைச் சொல்லி சரணடைந்தார்கள்.

போலீஸ் மறுநாள் இருவரையும் வழக்கு மன்றத்தில் நிறுத்தினர். கல்கத்தா நகர முஸ்லிம்களும், இந்தியாவில் ஏனைய பகுதியிலுள்ளவர்களும் இருவரையும் காண்பதற்கு திரண்டனர்.

பத்திரிகைகளும், வானொலியும், தொடர்ந்து இச்சம்பவத்தை எதிரொலித்தன. பம்பாயில் இருந்த ஜனாப் ஜின்னா சாகிப் கல்கத்தா புறப்பட்டார் என்று தகவல் உண்டு.

போலீஸ் பாதுகாப்பில் இருந்த இரண்டு தியாகச் செம்மல்களை நேரில் கண்டு "ஏதோ உணர்ச்சி வசப்பட்டு இந்தக் காரியத்தில் இறங்கினோம் என்றும், அவர்களுக்காக வாதாட வக்காலத்தில் கையெழுத்திட கேட்டுக் கொண்டார். ஜனாப் ஜின்னா சாகிப் போன்றே நூற்றுக்கணக்கான வழக்கறிஞர்களும், பெரும் பெரும் சீமான்களும் இருவரையும் விடுவிக்க பல்லாயிரக் கணக்கான பணங்களை செலவிட முன்வந்தார்கள் என்று சொல்லப்படுகிறது.

அப்போது அந்த இளைஞர்கள் ஜனாப் ஜின்னா சாகிபிடம் என்ன சொன்னார்கள் தெரியுமா? அவர்களது பதிலைப் படியுங்கள்! நமது ரத்த நாளங்களில் சூடேறுவதை உணருவீர்கள்!

நமது உயிரினும் மேலான ஈருலக சர்தார், சர்வரே ஆலம், காத்தமுன்னபி நபி (ஸல்) அவர்களை "ஸ்த்திரீ லோலன்" என்று எழுதிய அந்த மனித மிருகத்தைக் சுட்டுக் கொல்ல துணிந்த போது மிகமிக நிதானமாகத்தான் செயல்பட்டோம். எந்தவித உணர்ச்சிகளுக்கும் நாங்கள் ஆளாக வில்லை!

நாங்கள்தான் அவரைச் சுட்டுக் கொலைசெய்தோம். பிரிட்டிஷ் சர்க்கார் அளிக்கும் எந்தத் தண்டனையையும் மனதார ஏற்றுக் கொள்கிறோம் என்றனர்.

ஜனாப் ஜின்னா சாகிப் அவர்கள் ஏனைய வழக்கறிஞர்களும், சமுதாயச் சீமான்களும், முஸ்லிம் பொதுமக்களும் அப்படியே பிரமித்துப் போய்விட்டார்களாம்.

பிரிட்டிஷ் சர்க்காரின் வழக்குமன்றம் இவர்கள் இருவரையும் தூக்கிலிட உத்திரவிட்டது. தீர்ப்பின்படி இரண்டு வீர தீர ஈமானின் அதிபதிகளான

தளபதிகள் தூக்கிலிடப்பட்டார்கள் (இன்னாலில்லாஹி).

லட்சோப லட்சம் மக்களின் தோள்களில் இரண்டு பேர்களின் சந்தூக் ஜனாசா அலிபூர் கபுருஸ்தான்நோக்கி ஊர்ந்து சென்ற காட்சி காண்போரின் கண்களை குளமாக்கின. நெஞ்சங்கள் விம்மின!

சுவனத்தின் இரண்டு மலர்களை அலிபூர் கபுருஸ்தானின் சுவனப் பூங்காவில் நல்லடக்கம் செய்யப்பட்டனர். அன்றைய இந்தத் துயரச்சம்பவம் இன்று வரலாறாக குதுாப் மினார் போன்று உயர்ந்து நிற்கிறது. சுபுஹானால்லாஹ்! இரண்டு ஷுஹதாக்கள் பல வீர தீர தியாகிகளுக்கு முன் மாதிரியாகத் திகழ்கிறார்கள் என்பதுமட்டும் உண்மை.

சில ஆண்டுகளுக்கு முன் 'இந்து' ஆங்கில நாளேட்டில் தவ்ர் மலைக்குகையில் அபூபக்கர் (ரலி) மடியில் பெருமானார் படுத்திருப்பது போன்றும் குகைவாயில் சிலந்தி வலைபின்னி இருப்பது போன்றும் ஓவியம் வரைந்திருந்தது. இதைப்பார்த்த முஸ்லிம்கள் கண்டனக் கணைகளைத் தொடுத்த போது அப்படத்தை வரைந்த ஓவியர் "காஷ்யப்" என்பவர் தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டதோடு மன்னிப்பும் கேட்டுக் கொண்டார். இதற்குப் பின் தினமலர் நாளிதழ் ஞாயிறு 5.10.2001 சிறுவர் மலரில் அதே ஓவியத்தை வெளியிட்டு முஸ்லிம்களின் மதஉணர்வைப் புண்படுத்தியது. இணைவைத்தல், சிலைவைத்தல், படம் வைத்தல் இஸ்லாத்திற்குப் புறம்பானவை என்றிந்தும் தினமலர் இஸ்லாமியர்களை வேண்டுமென்றே புண்படுத்தியது.

தாங்கள் இஸ்லாத்தைத் தாக்குவதுடன் தரங்கெட்ட முஸ்லிம் பெயர் தாங்கிகளான முஸ்லிம்களிடம் குழப்பத்தைவிளைவிக்க அப்துல்லாஹ் இப்னு ஸபா என்ற யூதன் இஸ்லாத்தில் இணைந்தது போல் சிம்மோன் ருஸ்டம் என்பன் ஸல்மான்ருஷ்டியானான் இந்த ஸல்மான்ருஸ்ட்டி, தஸ்லீமா நஸ்ரின், ஷரீபா போன்றவர்களுக்கு டாலர்களை அள்ளிக் கொட்டி இஸ்லாத்தைத் தாக்க வைத்தார்கள். ஸல்மான் ருஷ்ட்டி தான் எழுதிய "சாத்தானிய வசனங்கள்" எனும் நூலில் திருக்குர்ஆனை இழித்துரைப்பதுடன் பெருமானாரை "மஹாவுண்ட்" என்றழைத்தான் இதன் பொருள் நம்நாட்டு வழக்கில் "பூச்சாண்டி" எனப் பொருள்படும். தஸ்லீமா நஸ்ரீன் "லஜ்ஜா" என்ற தனது நூலில் திருக்குர்ஆனைப் பற்றியும் பெருமானாரைப் பற்றியும் முஸ்லிம்களைப்பற்றியும் தரக்குறைவாக எழுதினார். இவ்விருவரையும் இங்கிலாந்தும், அமெரிக்காவும் தத்தெடுத்துக் கொண்டுவிட்டது.

1988 ல் ஸல்மான்ருஸ்டியின் தலைக்கு ஈரான் அதிபர் ஆயத்துல்லாஹ்கோ மேனி டாலர் நிர்ணயம் செய்தது போன்று, பெருமானாரைக் கேலிச் சித்திரம் வரைந்த கார்ட்டூனிஸ்ட் "குர்த்



வெஸ்டர் கார்டின்" என்பவரின் தலையைக் கொணர்வோருக்கு 51 கோடி ரொக்கப்பரிசும், அவரது பிண எடைக்குத் தங்கமும் வழங்கப்படும் என்று இன்றைய உ.பி. மாநில சிறுபான்மைத்துறை அமைச்சர் ஹாஜி யாகூப் குறைஷி அறிவித்தார்.

ஷரீபா என்பவர் தமிழ் நாட்டில் "ஸ்டெப்ஸ்" என்ற பெண்கள் அமைப்பை ஏற்படுத்தி இஸ்லாமிய பெண்களுக்காகப் பாடுபடுவதாக அமெரிக்க ஆதரவுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார். இவரின் செயல்பாடுகளில் முக்கியமானது இஸ்லாத்தில் ஆண்களைப் போலவே அந்தந்த ஊர்களில் பெண்கள் ஜமாஅத்தில் நிர்வாகக் கமிட்டியில் உறுப்பினர்களாக இருக்கவேண்டும் என்றும், பெண்களின் திருமண வயது 21 ஆக இருக்க வேண்டும், ஜமா அத்தார்கள் முன்னிலையில்நடத்தப்படும் திருமணங்கள் அரசு பதிவு முறைக்கு உட்படுத்த வேண்டும் என்பதாகும். 780 ஆண்டுகள் நடந்த இஸ்லாமிய ஆட்சி ஸ்பெயினில் வீழ்ச்சியடைந்த பின் அங்கு இஸ்லாமியர்களே இல்லாமலிருப்பதற்கு மூலகாரணமே இந்த இரண்டு விஷயங்கள்தான். இவ்வாறு அமெரிக்காவின் டாலருக்கு அடிபணிந்த ஷரீபா இஸ்லாமிய பெண்களை தவறான பாதைகளுக்கு அழைத்துச் செல்கின்றார்.

பெண்ணியம், பெண்ணுரிமை பேசிக் கொண்டும் திருக்குர்ஆனும், பெண்களும் என்ற நூல் எழுதிய பேராசிரியை ஆமீனா வாஹித் என்பவர் "பெண்கள் இமாமாக நின்று தொழவைக்கக் கூடாது" என்று குர்ஆனில் கூறப்படவில்லை என்று கூறி யூத, கிறிஸ்தவ ஆதரவுடன் 2005 மார்ச் 18 ம் நாள் வெள்ளிக் கிழமையன்று ஜூம்ஆத் தொழுகையை இமாமாக நின்று நடத்தியுள்ளார். எகிப்துவம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்கப் பெண் "சுஹைனா" பர்தாவும் முக்காடுமணியாமல் பாங்கு சொல்லியுள்ளனர். இத்தொழுகை நியூயார்க் நகரில் "செயிண்ட் ஜான்சர்ச்" கிறிஸ்தவ ஆலயத்தில் உள்ள சைனோட் ஹவுஸ் என்ற ஹாலில் நடந்தது இத்தொழுகையில் 200 பேர்கலந்து கொண்டார்கள். அவர்களில் பலர் தலையை மூடவில்லை. தொழுகை நடந்த இடத்திற்கு வெளியே இஸ்லாமியர்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமும் நடந்தது. ஆர்ப்பாட்டக்காரர்களை அமெரிக்க போலீஸ் வெளியேற்றிக் கொண்டிருந்தது என்று வால் ஸ்ட்ரீட் என்ற பத்திரிக்கையின் நிருபர் குறிப்பிட்டிருந்தார். ஜோர்டான் முன்னால் சமயத்துரை அமைச்சர் ஷேக் சைய்யது அவர்கள் குறிப்பிடுகையில் "இஸ்லாமிய சட்டதிட்டங்களின் கீழ் இது தடுக்கப்பட்டுள்ளது என்றார். இத்தொழுகை இஸ்லாமிய மார்க்கத்திற்கே எதிரானது என்று கருத்துத் தெரிவித்தார், பேராசிரியை யுவான் ஹத்தாது என்பவர்.

சிலுவைப் போர் பிரச்சாரம் செய்த மதகுரு பீட்டர் டென்மார்க்கைச் சேரந்தவர்தான். சிலுவைப்போரை முன்னின்று நடத்தியவர்களில் "வைகிங்–மாகியார் என்று இரு முரட்டு ரவுடிகளும் டென்மார்க்கைச்

சேர்ந்தவர்கள்தான். சிலுவைப்போரில் ஏற்பட்ட சிற்றங்கள் இன்றளவும் குறையவில்லை. இன்றளவும் அவர்கள் சிலுவைப்போர் மனநிலையிலேயே வாழ்ந்து கொண்டு வருகின்றார்கள். சிலுவைப்போர்களே இஸ்லாத்தைப்பற்றிய நோக்கையும் போக்கையும் நிர்ணயித்தன என்று லியோ பார்டு அஸத் என்பவர்தனது சிலுவைப் போர் பற்றிய நூலில் குறிப்பிடுகின்றார்.

இந்த அடிப்படையில்தான் புஷ்–பிளேயர் என்ற இரண்டு முரட்டுப் பொய்யர்கள் இஸ்லாத்தை அழிக்க போர் பரணிபாடியுள்ளார்கள். இரட்டை கோபுரம் தகர்க்கப்பட்ட மூன்றாம் நாள் நவீன சிலுவைப்போர் தொடங்கிவிட்டது என்று புஷ் கொக்கரித்தார்.

ஆனால் 11.9.2001 ல் நியூயார்க்கிலும், வாஷிங்டனிலும் இரட்டைக் கோபுரம் பெண்டகன் மீது மோதிய விமானங்கள் பயங்கரவாதிகளால் கடத்தப்பட்டவைகளல்ல. ரிமோட்கண்ட்ரோல் மூலமாக மோதவைக்கப்பட்டவை என்று ஜெர்மன் நாட்டின் முன்னாள் அமைச்சரும் இன்றைய பிரபல எழுத்தாளருமான "ஏண்ட்ரியாஸ்–வான்–போலோ" தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். நான்காவது விமானம் மோதாமல் பென்சில்வேனியாவில் விமானம் விழுந்து நொருங்கவில்லையென்று ஜெர்மன் நாட்டின் அரசு தொலைக்காட்சி நிலையமான "WDR" தக்க ஆதாரத்துடன் இத்தகவலை வெளியிட்டது.

புஷ்ஷின் நவீன சிலுவைப் போர் பிரகடனத்திற்கு ஐரோப்பிய நாடுகள் துணைநின்றன. யூதர்கள் அனைத்து யுக்திகளையும் வகுத்துத் தந்தார்கள். உஸாமா ஒளிந்து கொண்டிருக்கின்றார் என்று கூறி ஆப்கானிஸ்தானை அழித்தார்கள். நவீன அணு ஆயுதங்கள் உள்ளன என்று கூறி ஈராக்கை அழிக்கின்றார்கள். அதோடு ஈரானையும், சிரியாவையும் குறிவைக்கின்றார்கள். இன்று அமெரிக்க உதவியுடன் இங்கிலாந்து ரகசிய அணுகுண்டு தயாரிக்கின்றது என்ற செய்தி வெளியாகியுள்ளது.

"இங்கிலாந்து பிரதமராக டோனி பிளேர் இரண்டாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபின்" பிரிட்டன் பெர்க்ஷயர் உள்ள அணு ஆயத தயாரிப்புமையத்தில் இங்கிலாந்து அமெரிக்காவுடன் இணைந்து ரகசிய அணுகுண்டு தயாரிக்கும் பணியில் விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்கள். இத்தயாரிப்பிற்கு "நம்பிக்கையான அணு ஆயுதம்" எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது என்ற செய்தியை இங்கிலாந்து "சண்டே டைம்ஸ்" என்ற நாளிதழ் வெளியிட்டுள்ளது என்று தினகரன் தமிழ் நாளிதழ் 13.3.2006 திங்கட் கிழமை செய்தி வெளியிட்டுள்ளது.



## இஸ்லாமிய எழுச்சி!

இனி மோதல் என்பது அரசுகளுக்கிடையே இருக்காது மேற்கத்திய இஸ்லாமிய கலாச்சாரங்களுக்கிடையே தான் நடைபெறும் என்று அமெரிக்காவின் பிரபல ஆய்வாளர் "சாமுவேல் ஹன்டிங்டன்" என்பவர் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். இஸ்லாமிய எழுச்சி 21ம் நூற்றாண்டில் ஐரோப்பாவிலிருந்துதான் தோன்றும் என்று மொராக்காவிலுள்ள ஜெர்மன் தூதர் "டாக்டர் முராத்–ஹாஃப்மன்" இஸ்லாம்தான் ஒரே தீர்வு" என்ற தமது நூலில் குறிப்பிடுகின்றார். இவ்விருவரின் கருத்துகளுக்கேற்ப நடைமுறைகள் உண்மையாகக் கொண்டு வருகின்றன. இப்போது சர்வதேச அளவில் குறிப்பாக மேற்குலகில் அடித்தட்டு மக்கள் முதற்கொண்டு உயர்நிலையிலுள்ள பிரபலமானவர்களும் அறிவு ஜீவிகளும் மிக அதிகமாகவே இஸ்லாத்தில் இணைந்து கொண்டே வருகின்றார்கள்.

கி.பி. 1900 ல் 120 கோடியே ஒருலட்சத்து இரண்டாயிரத்து இருநூறு கோடியாக இருந்த இஸ்லாமியர்கள் கி.பி. 2025க்குள் 195 கோடி 70 லட்சத்து 19 ஆயிரத்தைத் தொட்டுவிடும் என்று ஒரு புள்ளிவிபரம் கூறுகின்றது. இன்று தற்போதைய நிலவரப்படி 138 கோடி 36 லட்சத்து 10 ஆயிரத்து 200 பேர் உள்ளார்கள். இதில் ஒவ்வொரு நாளும் சுமார் 78549 பேர் அதிகரிக்கின்றார்கள். இப்படியே சென்றால் 2058 ம் ஆண்டிற்குள் கிறிஸ்தவர்களைவிட முஸ்லிம்கள் அதிகமாகிவிடுவார்கள். உலகின் முதல் மார்க்கமாக இஸ்லாம் வெற்றிபெரும் என்று ஐரோப்பிய பேராசிரியர் "மைக் கேல் பிராவுன்" என்பவர் கூறியுள்ளார். முழு ஐரோப்பாவும் இஸ்லாத்தை ஏற்கும் காலம் கண்டிப்பாக வரஇருக்கின்றது என்று ஜார்ஜ் பெர்னாட் ஷா கூறிச் சென்றுள்ளார்.

இரண்டாம் உலகப் போரில் பிரெஞ்ச் கம்யூனிஸ்ட்களின் தலைவராக விளங்கிய அரசியல் தத்துவஞானி "ரோஜர் கரவ்டி" என்பவர் இஸ்லாத்தில் இணைந்தார். சிறந்த நூல் ஆசிரியரான இவர் 2003 ல் இஸ்லாம் ஆன்லைன் இணையதளத்திற்கு அளித்த பேட்டியில் "புதிய உலகக் கட்டமைப்பிற்கு இஸ்லாமே தலைமையேற்கும். உலகில் வாழும் கிறிஸ்தவர்களில் பாதிப்பேர் பரவலாக வளர்ந்து வரும் இஸ்லாமை எதிர்ப்பதில்லை.

உலகின் சில பகுதிகளில் தனது பிடிதளர்ந்துள்ளது குறித்து அமெரிக்கா ஆழமாகக் கவலை கொண்டுள்ளது. ஐரோப்பாவும், தென் கிழக்கு ஆசியாவும் அமெரிக்காவுக்குப் போட்டியாக பொருளாதாரச் சக்திகளாக வளர்ந்துள்ளன. இதனால் அமெரிக்கா தனது சரிவை உணர்ந்துள்ளது. அமெரிக்கா சாம்ராஜ்யம் மிகப் பெரும் சரிவை எதிர்நோக்கும் நிலையில் அதுஉருவாக்கிய புதிய உலகக் கட்டமைப்பை இஸ்லாமே வழி நடத்தும்

என்று ரோஜர் கரவ்டி பேட்டியளித்தார்.

## அரசியல் முனையில் தோற்ற இடங்களில் இஸ்லாம் ஆன்மீகபலத்தால் வென்றது

உலகிற்கே பீடையாகக் காட்சியளித்த பங்கோலியத்தலைவன் செங்கிஸ்கான் 1219 ல் சீனாவைக் கைப்பற்றிய பின் இஸ்லாமிய நாடுகளைச் சீரழித்துத் தீக்கிரையாக்கியதுடன் முஸ்லிம்களையும் படுகொலை செய்தான். இவனின் மகன் ஹுலாகூகான் பக்தாத் நகரைத் தீக்கிரையாக்கி இருபது லட்சம் முஸ்லிம்களைக் கொன்றொழித்தான். இதன்பின்னர் தார்த்தாரியல் படைகள் எகிப்து சுல்த்தான் ஸைஃபுத்தீன் அவர்களிடம் பெரும் தோல்வியைத் தழுவினர்.

ஆனால் இஸ்லாமிய ஆன்மீக பலத்தால் ஈர்க்கப்பட்ட செங்கிஸ்கானின் பேரன் பொன்சேனையின் தளபதி பராக்கான் இஸ்லாத்தில் இணைந்ததும் பொன்சேனையும் மற்ற தார்த்தரியர்களும் இஸ்லாத்தில் இணைந்தனர். செங்கிஸ்கானின் இன்னொரு பேரன் அபாக்கான் கிறிஸ்தவர்களுக்கு ஆதரவாக இருந்தான். பராக்கானுக்கு அபாக்கானுக்கும் நடந்த போரில் அபாக்கான் தோல்வியைத் தழுவினான். தோல்வியடைந்த சேனைகளும் மற்ற தார்த்தாரிகளும் முழுமையாக இஸ்லாத்தில் இணைந்தனர். இதன்பின் மற்றொரு கொள்ளுப் பேரனான காஸான் கிறிஸ்தவத்திலிருந்து இஸ்லாத்தில் அவரும் அவரைச்சார்த்தவர்களும் இணைந்தார்கள்.

ஈட்டிமுனையில் நிறுத்திய போதும் ஈமானை இழக்கமாட்டோம் என்று கூறியதற்காக 1700 முதல் ரஷ்யாவை ஆட்சி புரிந்து வந்த ஜார் மன்னர்கள் தார்த்தாரிய முஸ்லிம்களைக் கொடுமைப்படுத்தி கூட்ஸ்ரயிலில் ஏற்றி அடைத்து மூச்சுத்திணறக் கொலைசெய்யப்பட்டார்கள். இந்தியாவில் ஆங்கிலேயர்கள் கேரள முஸ்லிம்களை கூட்ஸ்வண்டியில் ஏற்றியடைத்து திருச்சூரிலிருந்து கோயமுத்தூர் அனுப்பி மூச்சுத்திணறவைத்துக் கொலை செய்தது போன்றே ஜார்மன்னர்களும் கொலை செய்ததுடன் அவர்களின் நாட்டையும் அபகரித்துக் கொண்டார்கள்.

1845 ல் பிரிட்டனும், பிரான்ஸும் இணைந்து ரஷ்யாவைத்தாக்கின இப்போர் தார்த்தாரியர்கள் வாழ்ந்து வந்த பகுதியான கிரீமியாவில் இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து நடந்தது இதனால் பெரும் நஷ்டத்திற்குள்ளான ரஷ்யாதனது வடதுருவப்பகுதியான அலாஸ்காவை அமெரிக்காவிற்கு 1867 ல் 7,26,000 டாலருக்குவிற்றது.

இஸ்லாமியர்களின் நாடான கவ்காஸ் பகுதியை ஜார் மன்னர்கள் தங்களின் ஆதிக்கத்தின் ஃழ் கொணர்ந்தார்கள். 1882 லிருந்து தொடர்ந்து இமாம் காஸிமுல்லாஹ் அவர்களும் அடுத்து இமாம் ஷாமிலி



அவர்களும் ஜார்மன்னர்களை எதிர்த்துப் போராடி ஷஹீதானார்கள். இஸ்லாமியர்களின் பள்ளிவாசல்களும், மத்ரஸாக்களும், கல்விஸ்தாபனங்களும் ஜார் மன்னர்களாலும்–ரஷ்ய புரட்சிக்குப்பின் (1917) போல்ஷ்வீக்குகளாலும் தகர்த்துத் தரைமட்டமாக்கப் பட்டன 1922 ல் ரஷ்யாவுடன் ஸ்டாலின் தலைமையில் கவ்காஸ் பகுதி இணைக்கப்பட்டது. 1979லிருந்து பத்தாண்டு காலம் ஆப்கானிஸ்தானுடன் போராடித் தோல்வியைத் தழுவிய ரஷ்யா 1991 ல் சிதறுண்டதால் கவ்காஸ் பகுதியில் அடங்கிய உஸ்பெகிஸ்தான், தாஜிகிஸ்தான், துர்க்மேனிஸ்தான், கிர்கிஸ்தான், ஆஜர்பைஜான் ஆகிய ஆறு இஸ்லாமியநாடுகளும் சுதந்திர மடைந்தன. செஸ்னியா என்ற வளமிக்க இஸ்லாமிய நாட்டை ரஷ்யா இன்றும் தனது கைப்பிடியில் வைத்துள்ளது. காரணம் அங்கு பெட்ரோலும், எரிவாயுவும் அபிரிதமாகக் கிடைக்கின்றது.

பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்த அல்ஜிரியா அஹ்மது பென்பெல்லா அவர்களின் போராட்டத்தால் 1919 ல் சுதந்திரம் பெற்றது. 1911 ல் இத்தாலி, லிபியாவை ஆக்கிரமித்தது லிபியாவின் சுதந்திரத்திற்காக முதல் பத்தாண்டுகள் சைய்யித் முஹம்மது இத்ரீஸ் அவர்களும் அடுத்த பத்தாண்டுகள் பேராசிரியர் உமர்முக்தார் அவர்களும் போராடினார்கள் இருவருமே ஷஹீதானார்கள். இந்தியாவில் முதல் விடுதலைப் போரை 1831ல் மௌலானா சைய்யித் அஹ்மது அவர்கள் துவக்கிப் போராடி ஷஹீதானார்கள். இந்தியாவின் எல்லைப்புற மாகாணமான வஜீரிஸ்தானில் ஹஜ்ரத் இஃபிபக்கீர் அவர்கள் இறுதி வரை ஆங்கிலேயர்களை நுழையவிடவே இல்லை. பின் பாக்கிஸ்தானுடன் இணைத்தார்கள். ஆப்கானிஸ்தானிலும் ஆங்கிலேயர்களை இறுதிவரை நுழையவிடாமல் இஸ்லாமியர்கள் தடுத்தேவைத்திருந்தார்கள்.

## இஸ்லாமிய சமுதாயம்

உலகில் இஸ்லாமிய சமுதாயம் எங்கு பரந்து காணப்படுகின்றது? முஸ்லிம்கள் பெரும்பான்மையாக, கணிசமாக எந்தப்பகுதிகளில் வாழ்கின்றார்கள் என்பதை நாம் நோக்கும் போது நமக்குச் சில அடிப்படை உண்மைகள் தெரியவரும்.

இஸ்லாம் ஆப்ரிக்காவில் ஜிப்ரால்டர் வளைகுடா முதல் நைஜீரியா வரையிலும், கிழக்குப் புறமாக எகிப்து முதல் சோமாலியா வரையிலும், ஐரோப்பாவில் பால்கனிலுள்ள சில பகுதிகளில் விரிந்து கிழக்காக கருங்கடலை உள்ளடக்கி வடக்கே அரபு தீபகற்பத்தின் வடக்குவரை இஸ்லாமியப் பகுதிவிரிவடைந்துள்ளது. கிழக்கே ஆசியாவின் மத்திய பகுதிக் குடியரசுகளை உள்ளடக்கி வடக்கே இந்தியாவின் நடுப்பகுதிவரை சென்று இந்தியாவின் தெற்குப் பகுதிவரை நீண்டு செல்கின்றது. பின் கிழக்காகத்திரும்பி மங்கோலியா மற்றும் சீனாவின்

மேற்குவரை செல்கின்றது. பின்னர் தெற்காக இறங்கி கிழக்கிந்தியத்தீவுகள் வரை அது நீண்டு செல்கின்றது.

முஸ்லிம்கள் வசம் உள்ள நிலப்பகுதி அகன்ற பெல்ட் போன்றுகாட்சியளிக்கின்றது. இஸ்லாம் கருங்கடற்கரையோரத்தின் பெரும் பகுதியையும் மத்திய தரைக்கடற்கரையோரங்களில், மூன்றில் இருபகுதிகளையும் செங்கடல், பாரசீக வளைகுடா கடற்கரைப்பகுதிகளை உள்ளடக்கி தெற்கே அகண்ட சமுத்திரப்பிரதேசங்களை நோக்கி நீள்வதையும் காணலாம்.

பால்கன் என்று அழைக்கப்படும் கவ்காஸ்பகுதிகளான ஆறு முஸ்லிம் குடியரசுகளைக் கொண்ட மத்திய ஆசியாவில் 50 மில்லியன் முஸ்லிம்கள் வாழ்கின்றார்கள். இவர்கள் வாழும் பகுதிகள் விவசாயம், கால்நடைகளுக்கு ஏற்றமான பகுதிகளாக இருப்பதுடன் பெட்ரோல், எரிவாயு, இரும்பு, நிலக்கரிகளும் கிடைக்கின்றன. உலகத் தேவைகளில் இறைச்சி கம்பளிகள் 30 சதவீதம் இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

இன்று ஆப்ரிக்காக் கண்டத்தில் 255 மில்லியன் முஸ்லிம்கள் வாழ்கின்றார்கள், 25 இஸ்லாமிய நாடுகளை உள்ளடக்கி உலகிலுள்ள கண்டங்களில் முஸ்லிம் பெரும் பான்மைக் கண்டமாக ஆப்ரிக்கா திகழ்கின்றது.

இரண்டாம் உலகப் போருக்குப்பின் ரஷ்யாவின் தலைமையிலான கம்யூனிஸ நாடுகளுக்கும் அமெரிக்காவின் தலைமையிலான முதலாளித்துவ நாடுகளுக்கும் இடையே தங்களின் கொள்கைகளை உலகின் பிறபகுதிகளில் பரப்புவதற்கு மேற்கொண்ட சூடான பிரச்சாரமுயற்சியே பனிப்போர் (COLD WAR) என்று வால்ட்டர் லிப்மான் என்ற அமெரிக்க ஆய்வாளர் கூறுகின்றார்.

இவ்விரு சக்திகளும் இஸ்லாத்தைப் பொது எதியாகக் கருதின காரணம். ஐரோப்பா கிறிஸ்தவ மதச் சேற்றில் இருண்டு புதையுண்டிருந்த காலத்தில் முஸ்லிம் உலகு பலநூற்றாண்டுகள் பொற்காலத்தில் மிளிர்ந்தன. ஆனால் 19ம் நூற்றாண்டில் மேற்குலகு இருட்டில் விழித்துக் கொள்ள இஸ்லாமிய உலகு வெளிச்சத்தில் உறங்கத் தொடங்கியது உறங்கிவிட்ட முஸ்லிம் உலகு இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே விழித்துக் கொண்டுவிட்டது.

1922 லிருந்து ரஷ்யா வல்லரசாக உருவாகி 1991 ல் சிதறுண்டு விட்டதால் இஸ்லாமிய எழுச்சி மேற்குலத்தின் வீழ்ச்சியென உணரத் தொடங்கிய மேற்குலகு இஸ்லாத்தை நசுக்க தனது கவனத்தைச் செலுத்தியது.

“சோவியத் யூனியனின் உடைவைத் தொடர்ந்து ஒரு புதிய ஒழுங்கு உருவாகப் போகின்றது அது உலகில் ஆதிக்கம் செலுத்தும்



நாகரீகங்களுக்கிடையான மோதலாக வெடிக்கும். இம்மோதல் தவிர்க்க முடியாதது. 90 களுக்குப்பின் இஸ்லாமிய அடிப்படைவாதமே அமெரிக்க வல்லரசை எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவாலாக இருக்கும். இந்த சவால்களைச் சந்திக்க அமெரிக்கா இஸ்லாமிய நாடுகளுக்கிடையிலான பிளவுகளை நன்குபயன்படுத்தி அமெரிக்காவின் ராணுவ அரசியல் ஆதிக்கத்தை அந்நாடுகளில் திணிக்க வேண்டும்.” என்று யூத ஆய்வாளரான சாமுவேல் ஹண்டிங்டன் தனது ஆய்வுரைகளில் வலியுறுத்தி வந்துள்ளார்.

இவரின் திட்டத்தை அமெரிக்க அப்படியே ஏற்றுக் கொண்டு மத்திய கிழக்கில் அமெரிக்க ராணுவத்தை வலுவாக நிலைநிறுத்தி தனக்குச் சார்பான பொம்மை அரசுகளை நிலைநிறுத்துவதில் வெற்றி கண்டு வருகின்றது. இதற்காக அமெரிக்காவருமானத்தில் 45 சதவீதத்தை ஒதுக்கிச் செயல்பட்டுவருகின்றது. சாமுவேல் ஹண்டிங்டனின் யோசைனைப்படி மெக்டொனால்ட் ரம்ஸ் பெல்ட், ரிச்சட் பேன்ஸ், கொண்ட லீஸா, போல் லொஸ்ட் போவீட்ஸ் போன்றவர்கள் செயலாக்கிக் கொண்டு வருகின்றார்கள் இவர்களில் பெரும் பாலோர்யூதர்கள்தான்.

அமெரிக்கப் பொருளாதாரத்துறை ஆய்வாளர் ஜெரிமிரிஃகின் “ஹைட்ரஜன்” என்ற தமது நூலில் அமெரிக்காவில் கிடைக்கும் எண்ணை வளம் அடுத்த பத்தாண்டுகள் மட்டுமே நிலைத்திருக்கும் என்று குறிப்பிடுகின்றார். மேற்குலகு எண்ணைக்காக விரும்பியோ, விரும்பாமலோ அது இஸ்லாமிய நாடுகளிலுள்ள பெட்ரோல் வளத்தையே சார்ந்திருக்க வேண்டியதிருப்பதால் மத்திய கிழக்கைச் சூரையாடி தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர முதல்நடவடிக்கையாக ஈராக்கைத்தாக்கியது. இஸ்லாம் மேற்குலகில் வேகமாகப்பரவி வருகின்றது இன்று அமெரிக்காவில் இஸ்லாம் இரண்டாவது சக்தியாகவும் முஸ்லிம்கள் இரண்டாவது பெரும் பான்மையினராகவும் மாறியுள்ளனர். அமெரிக்காவில் முஸ்லிம்களின் எண்ணிக்கை பத்துமில்லியனையும் தாண்டியுள்ளது.

ஆப்ரிக்கா 1800களில் இப்பகுதி வளமிக்கதாக இருந்தது. அன்று தங்கம், உலோக உற்பத்தியில் உலகின் 30 சதவீத தேவையை நிறைவேற்றியது. ஆனால் ஐரோப்பிய காலணி ஆதிக்கத்தால் இக்கண்டத்தில் வளங்கள் அனைத்தும் சுரண்டப்பட்டு வறுமை நாடாக மாற்றப்பட்டது.

1444 லிருந்து இங்குள்ள கருப்பின முஸ்லிம்களை போர்ச்சுக்கீஸியர்கள் கடத்திச் சென்று கரும்புத் தோட்ட முதலாளிகளுக்கு விற்றார்கள் அடுத்து டச்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள், அஸ்கிலேயர்கள் என ஐரோப்பியர்கள் இம்மக்களை கடத்திச் சென்று பண்ணை முதலாளிகளுக்கு சுரங்க முதலாளிகளுக்கும் விற்றார்கள். இதன் பின் 1500 லிருந்து

அமெரிக்காவியாபாரிகள் ஆப்ரிக்கர்களை அமெரிக்காவுக்கு கடத்திச் சென்று பண்ணை முதலாளிகளிடம் விற்றார்கள். இவ்வியாபாரம் அமெரிக்க ஜனாதிபதி ஆபிரஹாம் லிங்கன் 1863 ஜனவரி 1ம் தேதி அடிமை ஒழிப்புச் சட்டம் அமுலாக்கப்படும் வரை தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது 1921 ல் பிறந்த "அலெக்ஸ் ஹேலி" என்பவர் தமது மூதாதையர் யார் என்பதை கண்டறியும் போது அவரின் ஏழாவது பாட்டனார் 1767 ல் ஜுஃபூரிலிருந்து கடத்தி வரப்பட்ட குண்டாகிண்டே என்ற முஸ்லிம் என அறிந்தார். இம்முஸ்லிமின் தந்தை பெயர் "உமரோ" என்பதாகும். தமது ஏழு தலைமுறை வரலாற்றைத் தொகுத்த அலெக்ஸ் ஹேலி "வேர்கள்" எனும் பெயரில் நூல் வெளியிட்டுள்ளார். இன்று அமெரிக்காவில் வாழும் 25 கோடி ஆப்ரிக்கர்களின் முன்னோர்கள் ஆப்ரிக்காவிலிருந்து கடத்திவரப்பட்டு விற்கப்பட்ட முஸ்லிம்கள்தான். 1950 எலிஜா முஹம்மது மால்கம் X போன்றவர்களின் இஸ்லாமியப் பிரச்சாரத்தினால் கோடிக் கணக்கான கருப்பர் இஸ்லாத்தில் இணைந்து கொண்டே இருக்கின்றார்கள். இன்று அமெரிக்காவில் முஸ்லிம்கள் பத்து மில்லியனுக்கும் அதிகமாக வாழ்கின்றார்கள்.

உலகிலேயே மிக அதிகமாக இஸ்லாமியர்கள் வாழும் நாடு 6000 தீவுகளைக் கொண்ட இந்தேனேஷியாதான். இங்கு 200 மில்லியன் முஸ்லிம்கள் வாழ்கின்றார்கள். சிறந்த மீன்பிடித்தளங்கள், துறை முகங்களைக் கொண்ட கடல் வளமிக்க நாடாக இந்தோனேஷியா திகழ்கின்றது. கிழக்குத் திமோரை இதிலிருந்து பிரித்து கிறிஸ்தவ நாட்டை உருவாக்குவதற்கு மேற்கத்திய ஏகாதிபத்தியங்கள் முனைப்புடன் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மலேஷியா, பிலிப்பைன்ஸின் மோரோ பகுதிகள், புருணை, நாடுகளும் இஸ்லாமியர்கள் கணிசமாக செழிப்புடன் வரும் நாடுகளாகும்.

உலகில் மிகச் செழுமையாக முஸ்லிம்கள் வாழும் பகுதி தென் மேற்கு ஆசியாவான மத்திய கிழக்குப்பகுதிகளாகும். உலகிலேயே அபிரிதமான பொருளாதாரம் வாய்ந்தவைகளாக இப்பகுதிகள் திகழ்கின்றன. 12 முஸ்லிம் பெரும்பாண்மை நாடுகளைக் கொண்ட இப்பகுதிகளில் 300 (284:4) மில்லியன் அரபு முஸ்லிம்கள் வாழ்கின்றார்கள். உலக பெட்ரோல் வளத்தில் 70 சதவீதம் அரபு நாடுகளில் அமைந்துள்ளன. தற்போது பெட்ரோல் உற்பத்தி அளவுடன் ஒப்பிடுகையில் ஈரான் தொடர்ந்து 53 வருடங்களுல் ஸுஊதி அரேபிய 55 வருடங்களும் ஐக்கிய அரபு எமிரேட்சுகள் 75 வருடங்களும் குவைத் 116 வருடங்களும், ஈராக் 526 வருடங்களும் தொடர்ந்து பெட்ரோலிய உற்பத்தித்துறையில் ஈடுபடும் சேமிப்பு மையங்களைக் கொண்டுள்ளது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.



## இன்று நடப்பது கலாச்சாரப் போராகும்.

இன்று நடப்பது மேற்கத்திய ஏகாதிபத்தியங்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையே நடப்பது கலாச்சாரப் போராகும். நாமே நமது நபியவர்களையும் மார்க்கத்தையும் அவர்கள் கிறிஸ்தவத்தை லேசாகக் கருதுவது போல் நாமும் கருதி உளவியல் பூர்வமாக செயலாற்ற வேண்டும் எனநினைக்கின்றார்கள்.

போதிய ஆயுதங்களும் பொருளாதாரமும் இல்லாததுடன் மிகவும் சொற்ப எண்ணிக்கையிலிருந்த ஸஹாபாக்களிடம் பாரசீகம், ரோம் போன்ற வல்லரசுகளெல்லாம் அடிபணிந்தன. ஒன்றிரெண்டு ஸஹாபாக்கள் கால்வைத்த இடங்கள்கூட இஸ்லாமிய கேந்திரமாக மாறியது. மிககுறுகிய காலத்தில் உலகின் பெரும் பகுதியை தங்களின் கட்டுப்பாட்டில் கொண்டுவர ஸஹாபாக்களால் எப்படி முடிந்தது? இன்று நாம் 138 கோடிப்பேர் உள்ளோம் 57 இஸ்லாமிய நாடுகள் உள்ளன. உலகின் உயிர்த்துடிப்பான பெட்ரோல் வளத்தில் 90 சதவீதத்தைப் பெற்றுள்ள நாம் மேற்குலகம் மட்டுமின்றி முழுஉலகமுமே நம்மைச் சீண்டுகின்றது. இழிவாகப் பார்க்கின்றது, தாக்குகின்றது மிகக் கடுமையான சோதனைகளுக்கு உள்ளாக்கப்படுகிறோமே ஏன்? இதற்கான விடையை பெருமானாரின் பொன்மொழியில் காணுவோம்.

ஒரு பாத்திரத்தைச் சுற்றி அமர்ந்து சாப்பிடுபவர்கள் அப்பாத்திரத்தைத் தத்தமது பக்கமாக இழுப்பதுபோல் உலகின் மற்ற சமூகத்தார் (முஸ்லிம்களான) உங்களை நாலாப்புரமும் இழுத்துச் சீண்டுவார்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியபோது அந்நாளில் நாங்கள் குறைவாக இருப்போமா? என்று ஒருவர் கேட்கும் போது; இல்லை அப்போது நீங்கள் அதிகமாக இருப்பீர்கள் ஆனால் வெள்ளத்தில் அடித்து வரப்படும் குப்பை கூளங்கள் (பயனற்று இருப்பது) போன்று இருப்பீர்கள். அதோடு அல்லாஹ் உங்கள் விரோதிகளின் உள்ளத்திலிருந்து உங்களைப் பற்றிய பயத்தை நீக்கிவிடுவான். மேலும் உங்கள் உள்ளங்களில் அல்லாஹ் உலகஆசையையும், மரணத்தை வெறுப்பதுமான வஹ்னைப் போட்டு விடுவான் என்றார்கள். நூல் : அபூதாவூது

நாம் இப்பொன்மொழி மூலம் நமது இன்றைய நிலையைச் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம். அன்று ஸஹாபாக்கள் கைக்கொண்டிருந்த உலகப் பற்றின்மையையும், மரணபயமின்மையும் நாம் கடை பிடித்தாலே உலகில் நம்மையாரும் விஞ்சமுடியாது என்பது திண்ணம்..

## இஸ்லாமியர்களுக் கெதிரான உணவுப் பொருட்கள் ஐரோப்பாவின் சூழ்ச்சி!

ஒரு பொருளின் மேலுறையில் அதில் என்னென்ன? பொருட்கள்

கலந்துள்ளன என்பதைப்பட்டியலிடுவது உலக நடைமுறைச் சட்டமாகும். மேற்கத்திய – ஐரோப்பிய நாடுகளில் வாழும் இஸ்லாமியரல்லாத மக்களின் அசைவ உணவுகளில் முதன்மை பெறுவது பன்றி இறைச்சியாகும். ஒவ்வொரு நாடுகளிலும் குறைந்தது 50,000 பன்றிப்பண்ணைகள் வரை உள்ளன.

இவ்விலங்கிலிருந்து பெறப்படும் கொழுப்புகள் கடந்த அறுபது ஆண்டுகளுக்கு முன்புவரை எரிக்கப்பட்டுவந்தது. ஆனால் இக்கொழுப்பை மேற்கத்திய உணவுத்துறை வேதியியல் மாற்றம் செய்து உணவு, மருந்து, சோப்பு பொருள்களில் கலக்கத்துவங்கியது. அவ்வாறு கலப்பப்பட்ட பொருள்களின் மேலுறைகளில் PIGFAT என்று குறிப்பிட்டது. அதன்பின் ANIMAL FAT என்று உணவுத்துறை குறிப்பிட்டது.

இஸ்லாமிய நாடுகளும், சைவ உணவாளர்களும் அந்தப் பொருட்களைப் புறக்கணித்ததால் உணவுத்துறை பணமுடக்கம் ஏற்பட்டு பெரும் நஷ்டமடைந்தது. மேற்கத்தியர்களின் வர்த்தகத்தில் 75 சதவீதம் இஸ்லாமியர்களுடன் தொடர்பு கொண்டுள்ளதால். PIGFAT-ANIMAL FAT என்ற சொற்களை மாற்றி "E.CODES" என்று குறிப்பிட்டனர்.

பற்பசை, ஷேவிங்கிரீம், சூயிங்கம், சாக்லேட்ஸ், பிஸ்கட்ஸ், கார்ன் பிளாக்ஸ், டாஃபிஸ், டின் உணவுகள், வைட்டமின் நிறைந்த மருந்து, மாத்திரைகளில் இக்கொழுப்பு சேர்க்கப்படுகின்றது. அறிந்தோ, அறியாமலோ இந்தப் பொருட்களைப்பயன்படுத்துவதால் தான் சமூகத்தில் பல பிரச்சனைகள் பல கோணங்களில் ஏற்படுகின்றன. வெட்கமின்மை, மூர்க்கத்தனம், வரம்பு மீறிய பாலுணர்வுகள் போன்ற இழிசெயல்கள் அதிக அளவில் காணப்படுகின்றன.

பிரான்ஸ் நாட்டிலுள்ள பீகல் நகரிலுள்ள உணவுத்துறையில் பணியாற்றிவரும் சேக்ஸாஹிப் என்பவர் நாம் வாங்கும் பொருள்களில் பின்வரும் குறியீடுகள் இருந்தால் அவற்றைக் கட்டாயம் தவிர்த்து விடுங்கள் என்று அறிவுரை பகர்கின்றார். அந்தக் குறியீடுகளில் சிலவற்றைக் கீழே தரப்பட்டுள்ளது.

E-100 E110 -E120 - E 140 - E 153 E 141 E 2110- E 214- E - 215 E - 216 - E 234 - E 252- E 270 - E 280- E 325- E 326 - E 327 E 334- E335-336- E 337- E 422 - E430 - E431-E432- E433-E 434- E 435- E 436- E 440 E470 E 478- E 481 E 482- E 491- E 495- E 542- E 570 - E 572- E 631- E 635 E 904

இத்தகைய குறியீடுகள் பொருட்களின் மேலுறைகளில் குறிப்பிடப்பட்டிருந்தால் இஸ்லாமியர்கள் கண்டிப்பாகத் தவிர்த்து விடவேண்டும் என்று சேக் ஸாஹிப் அறிவுறுத்துகின்றார்.



## மேற்கத்திய கலாச்சார மோதலை முறியடிக்க நாம் என்ன செய்ய வேண்டும்?

1. கல்வி அறிவின் முக்கியத்துவத்தை இஸ்லாம் நமக்கு ஆணித்தரமாக வலியுறுத்தி இருக்கின்றது. ஆனால் கல்வி, அறிவியல், தொழில்நுட்பம், மற்றும் அறிவுத்தளங்களில் நாம் வெகுவாகப் பின்தங்கியுள்ளோம். இந்தநிலமையை உடனடியாக மாற்ற வேண்டும்.

2. சமுதாய ஒற்றுமையை இஸ்லாம் மிக அதிகமாக வலியுறுத்தியுள்ளது. ஆனால் இன்று நம்மிடையே ஒற்றுமை இல்லை. மூட்டையிலிருந்து சிதறிய நெல்லிக்காயைப் போன்று சிதறிக்கிடக்கின்றோம். இந்தநிலையை மாற்றியே ஆகவேண்டும்.

3. நாம் நம்முடைய எதிரிகள்யார், நம்முடைய நண்பர்கள் யார் என்பதை அடையாளம் காண்பதில் தெளிவாக இருக்க வேண்டும். சில சமயம் இந்த விஷயத்தில் பெரும் தவறு இழைத்து விடுகின்றோம். முஸ்லிம்களுக்கு முஸ்லிம்களே எதிரிகளாக ஆகிவிடுகின்ற ஆபத்தான நிலையை மாற்ற வேண்டும்.

4. இறை நம்பிக்கை, நற்செயல்கள் மூலம் நம்மை நாமே மேலே உயர்த்திக் கொள்ளவேண்டும். தொழுகை, நோன்பு, ஜக்காத் ஆகியவைதான் நற்செயல்கள் என்பதில்லை. இவைகளுடன் எல்லா அறிவுக்களஞ்சியங்களிலும் நிபுணத்துவம் பெறுவதுடன் ஷரீஅத்தின் அடிப்படையில் மருத்துவம், பொறியியல் தொழில் நுட்பம் எல்லாவற்றையும் ஷரீஅத்தின் அடிப்படையில் மறுகட்டமைப்புச் செய்வது. இவ்வாறு இந்நான்கையும் செயல்படுத்தினோம் என்றால் இன்ஷா அல்லாஹ் வெற்றி பெறுவது நிச்சயம்!.

## உலகை ஆளும் உரிமை யாருக்கு?

இவ்வுலகின் மீது எப்போதும் கல்வியறிவின் ஆட்சிதான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எந்தச் சமுதாயம், எந்த இனம் கல்வியறிவில் மற்றவர்களைவிட முன்னேறிவிடுகின்றதோ அந்தச்சமுதாயம், அந்த இனம் தான் உலகின் தலைமைத்தவத்தைக் கைப்பற்றிக்கொள்கிறது.

முஸ்லிம்களிடம் இக்கல்வியறிவு குவிந்திருந்த போது அவர்கள் உலகின் ஆட்சியாளர்களாய் திகழ்ந்தார்கள்.

ஐரோப்பியர்கள் கல்வியறிவில் வேகமாக முன்னேறியபோது உலகின் மேலாதிக்கம் கிறிஸ்தவர்களின் கைக்கு வந்தது.

யூதர்கள் இத்துறையில் முன்னேறியபோது, ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, ரஷ்யா ஆகிய நாடுகளில் அவர்கள் சிறுபான்மையினராக இருந்த போதிலும் அவர்களே மேலோங்கும் சக்திகளாக விளங்குகின்றனர்.

இதே கருவியைக் கொண்டே ஜப்பான் இன்ற பலதுறைகளிலும் ஒரு சக்தியாக வளர்ந்து வருகிறது. இனி வருங்காலத்திலும் கல்வியறிவில் முன்னேறயிருப்பவர்களே உலக ஆட்சியாளர்களாக இருப்பார்கள்.

டாக்டர் இஸ்மாயில் ராஜி ஃபாரூக்கி

"முஹம்மது நபி (ஸல்) ஒரு தனிப்பட்ட அதிர்ஷ்டத்தின் காரணமாக மூன்று விதமான ஸ்தாபகராக உள்ளார்கள். ஒரு சமுதாயத்தின் ஸ்தாபகர்–ஒரு சாம்ராஜ்யத்தின் ஸ்தாபகர், ஒரு மதத்தின் ஸ்தாபகர்" என்று கிறிஸ்தவ மதகுரு பாஸ்வர்த் ஸ்மித் என்பவர் கூறுகின்றார்.

"மனிதர்களின் மாண்பினை அளக்கக்கூடிய எந்த அளவுகோலினால் அளந்து பார்ப்பினும் எந்த மனிதர் முஹம்மது நபியைவிட மேலானவர்? என்று கேள்வியைக் கேட்டு அதற்குத் தாமே வேறு ஒருவருமில்லை? என்று பதில் கூறுகின்றார் பிரெஞ்சுக் கவிஞர் லமார்ட்டின் என்பவர்.

நூறு நபர்கள் என்னும் நூலில் முஹம்மது நபி அவர்களுக்கு முதலிடத்தை அளித்த "மைக்கல் H. ஹார்ட்" தமது நூலில் இடம் பெற்று இருப்பவர்களின் பெரும்பாலோரை பெரும்பாலான மக்களுக்குத் தெரியாது. ஆனால் முஹம்மது நபி உடைய திருப்பெயரோ உலகின் நான்கில் ஒரு பங்கு மக்களான 150 கோடி முஸ்லிம்களின் இதயங்களிலும் நாவுகளிலும் ஒளிர்ந்து, தவழ்ந்து கொண்டிருக்கின்றது. இன்று விண்ணில் முஹம்மது எனும் பெயர்தான் சதாகாலமும் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது.

ஸல்லல்லாஹு அலாமுஹம்மதின் – ஸல்லல்லாஹு அலைஹிவ – ஸல்லல்ாஹு – அலா முஹம்மதின் யாரப்பிஸல்லிம் – அலைஹி – வ – ஸல்லம் – வஸ்ஸலாம்



## SINISTER AND SENSELESS ATTACKS ON ISLAM AND MUSLIMS BY WESTERN MEDIA

Dear A-Letter Readers:

Four months ago, Denmark's Jyllands-Posten newspaper published 12 caricatures of the prophet Muhammad. You know the rest. A dictionary definition of "cartoon" describes it as a drawing depicting a humorous situation representing current public figures or issues symbolically, often satirically with irony, sarcasm, or caustic wit used to attack or expose folly, vice, or stupidity. Having served in the US Congress, I'm familiar with this form of American free speech. Hanging on my wall is a cartoon from The Baltimore Sun, a liberal newspaper that generally opposed me and my conservative views during my public service. The cartoon depicts me pushing down the plunger on explosive charge about to blow up the Panama Canal as a ship passes through. This was a crude reference to my position as ranking Republican on the House Panama Canal Subcommittee and my vehement opposition to Jimmy Carter's treaties that gave the US Canal to Panama.

Granted I am not or a par with the prophet Muhammad, nevertheless I did not try to burn down the offices of the Sunpapers on Calvert Street in Baltimore to show my displeasure. (In fact I was flattered that The Sun cared enough to gig me and it pleased my conservative constituents. Unable to escape 24-7 TV coverage of anything morbid, destructive and sensational, by now most of the world knows that groups of irate Muslims have rioted in the streets of cities from Damascus and Beirut to Kabul and Lahore to Gaza. Libya, Syria, Saudi Arabia and Kuwait withdrew their ambassadors from Copenhagen, calling for an apology and punishment of the editors.

Danish products are boycotted in the Middle East, where state-run media talk about a conspiracy against Islam. Palestinian terrorists have declared Danes and other Europeans as legitimate death targets I love studying history.

But I am concerned that most Americans (and others) these days do not realize the truth of Shakespeare's' observation that: "What is past is prologue." These brainless street riots over what appear to be legitimate cartoons, (the "free press" wimps in the US media wont show them), were sparked because they depicted a certain segment of Muslims as advocating brutal violence and death to "unbelievers" – non-Muslims. And it seems the majority of Muslims leaders openly encourage this insanity, passively allow it, or remain silent. The last time history saw rampaging street thugs advocating extermination of hated others is was on Kristallnacht, the Nazi prelude to the slaughtering of millions of Jews. Yet the Bush administration and European governments, while paying lip service to "free speech" and a "free press," tut-tutted about the unfortunate offense of Muslims caused by with these truthful cartoons. Do these wimps recognize the wider issues here? Some things are just wrong and must be so described in uncompromising terms. Have appeasers forgotten the thousands of murders on 9-11, or the London, Madrid and scores of other bombings, all in the hijacked name of Allah? The cartoon capers are just another skirmish in a clash of Western civilization and radical Islam that goes back centuries.

The West finally won that bloody battle with the liberation of Vienna in 1683 from the Turks. Earlier at the Battle of Poitiers (Tours) in 732, Charles Martel and the Franks defeated a massive invading Islamic army. That battle stopped the northward advance of Islam from the Iberian Peninsula. Most historians view this as the end to the invasion of Europe by Muslims, preserving Christianity at a time when violent Islam was overrunning the remains of the old Roman and Persian Empires. Historian Samuel Huntington, who popularized what has been called the "clash of civilization theory," suggests that the struggle between Islam and Christianity has now lasted for some 14 centuries.

He wrote: "It should by now be clear that we are facing a mood and a movement far transcending the level of issues and policies and the governments that pursue them. This is no less than a clash of civilizations – the perhaps irrational but surely historic reaction of an ancient rival against our Judaeo-Christian heritage, our secular present, and the worldwide expansion of both." Put simply, certain Muslims don't like us, not because of what we do, (which is provocative enough; Iraq, oil, Israel) but because too many Muslims reject the West's love of freedom and perhaps because they have been on the losing side for 300 years. Muslims' refuse to be rule by infidels and to many of them all non-believers are infidels. Read history and you will understand why these street riots are another stark symptom of a much deeper, chronic problem that will torment the world for a long time. It already has.

That's the way that it looks from here.

BOB BAUMAN, Editor.

## REJOINDER TO THE WEBSITE VENOM!

Sir,

Read the article" West vs East. Under the cowardice excuse of freedom of speech or press to hurt millions of Muslims' emotional hearts. We respect our prophet Muhammed (Peace be upon him) Above ourselves, we ready to lay down our life to upheld his honour. Especially we never allowed to draw or paint his figure in any form. Our Quran and Hadiths. (Sayings of Prophet) do not allow us to do so. This type of mean minded deneraged white skinned people from west and their henchmen only do this harmful & shameful Act. As cartoons if we depict respectful Christ and his mother Mary or the said spineless press, will the self respect Christian brothers & Sisters Digest? Your freedom is limited to show your finger to me not to touch my nose, and then it will be fatal.

Ask the writer to read the biography of prophet Muhammed (Peace be on him) written by eminent scholars, including from west. By doing this kind of Diabolic Designs to malign the great personlity like him will be retaliated suitably. Many Centuaries ago to till now many kind of sinister plans and actions inflicted on Islam and Muslims. But still the truth and philosophy of Islam and its strength grows unabatedly.

I pray almighty Allah to give the people who go astray, to bring His way and give sense and sensibility to them. Your western culture brought worldy comforts to us but erode the very basis of the moral and humanism from mankind. Inform the writer of that topic to be fair and sensible.

Regards!

Kamarulzaman NM, E-mail:kamarulzaman@Malaysia.com
Mobile:00919840354116



**APPEALS TO WORLD MUSLIMS TO CONDEMN CARTOONS ON PROPHET MOHAMED (PBUH) CHIEF IMAM OF GRAND MOSQUE AT MECCA (KABATHULLAH) SHAIK RAHMAN AL SUDHAISI.**

*O! World Muslims the time has been come to condemn those who had degraded the honour of our Holy Prophet Muhsmmed (PBUH) by published ungraceful cartoons in Europeon Print Media, should be punished suitably and severely. The duability of the western countries are exposed in the matter of publication of cartoons on our revered prophet. In the name of press freedom, they supported the heinious act. This act hurts the hearts of 1.5 billion muslims of the world.*

*We have to utilize this situation to condemn those diabolic designers and use this oppurtunity to propagats messages of Allah and His prophet to the world public. It should include the life, spotless characters and happining during prophet Muhamed's (pbuh) life turn this in all languages of the world in the forms of books, conducting seminars etc., the wealthy people of Muslim community should have to deliberately, defiantly help to work against the evil acts of mispropaganda on Islam and prophet Muhammed (Pbuh)*
*courtesy to samarasam (28.2.2006)*
*for turther informations about islam and prophet check*
*www.cairnet.org/muhammed*

**உலக முஸ்லிம்களுக்கு மக்கா இமாம் வேண்டுகோள்!**

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இழிவு படுத்தியவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும். உலக முழுவதிலிமுள்ள 150 கோடி முஸ்லிம்களின் உணர்வுகளைக் காயப்படுத்திய இவ்விவகாரத்தில் மேற்கத்திய நாடுகள் மேற்கொண்ட இரட்டை நிலைப்பாடும் அம்பல மாகியுள்ளது.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முஹம்மது நபி (ஸல்) அவர்களின் செய்திகளையும், அவர்களின் பண்பு நலன்களையும், வாழ்வியல் முன்மாதிரிகளையும் புத்தகங்களின் மூலமாகவும், நிகழ்ச்சிகளின் மூலமாகவும், உலகம் முழுவதும் பல்வேறு மொழிகளில் பரப்ப வேண்டும்.

இஸ்லாத்திற்கெதிராக செய்யப்படும் அவதூறுப் பிரச்சாரத்தை முறியடிக்க முஸ்லிம் செல்வந்தர்கள் தாராளமாகச் செலவழிக்க வேண்டும்.

ஷைகு அப்துர் ரஹ்மான்
அல்சுதைஸி
நன்றி – சமரசம் 16–28 பிப்ரவரி இதழ்